www.padippakam.com


# நற்றமிழ்

விலை ரூ 6.00 இலக்கிய இலக்கணத் திங்களிதழ்


தோள்கள் உடையவர்கள் ஒன்றுபடுங்கள்-புதுத்
தோற்றம் விழைபவர்கள் ஒன்றுபடுங்கள் - அறிஞர் சாலை இளந்திரையனார்


ஆண்டு-ரு திங்கள்-கஉ தி.ஆ.உ0ருஎ சுறவம் (தை) (15-1-2006)

ஆசிரியர் : 'தமிழ்மாமணி' புலவர் மு. இறைவிழியன்

இணையாசிரியர்கள் : புலவர் அரங்க. நடராசன், புலவர் செ. இராமலிங்கன்




## பொங்கல்

தமிழனுக் கொருதிருநாள் - பெருந்
தைப்பொங்கல் என வருநாள்
அமுதமும் புதிரியும் அடுகலம் பொங்கும்
அழகிய கோலங்கள் அறிவோடு தங்கும்
கமுகமும் வாழையும் கன்னலும் தெங்கும்
காய்தரு நெல்லொடு காண்வரும் எங்கும் (தமிழனுக்)

முல்லையில் மதமிக முழங்கும்கொல் வேறு
முதுகுடி மறவரும் முன்னுவர் வீறு
தொல்லைநல் வழக்கமே துணையுறு பேறு
தூய தமிழர்விழா துணிந்திது கூறு (தமிழனுக்)

- மொழியியல் அறிஞர் தேவநேயப் பாவாணர்

*தமிழர் திருநாளில் உள்ளம் தழைத்திடுக!*
*தமிழ்வாழ்க வையம் தழைத்து மகிழ்கவே!*

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு.
-பாரதியார்

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள தமிழர் ஒன்றாதல் கண்டே!
-பாவேந்தர்

www.padippakam.com



# தமிழ் ஈழம்

## ..... இந்திய நடுவணரசின் கடமைகள் .....

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வங்காள மாநிலம் இரண்டாக, மேற்கு வங்காளம் கிழக்கு வங்காளம் எனப் பிரிக்கப்பட்டது. அப்பிரிவினை தீதானது. அதனைக்கைவிட வேண்டும் என அந்நாளில் பேராய இயக்கம் அண்ணல் காந்தியடிகள் தலைமையில் கடுமையாக எதிர்த்தது. நடெங்கும் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் நடந்தன. ஆங்கில அரசு அஞ்சிப் பிரிவினையைக் கைவிட்டது.

1947 ஆம் ஆண்டு இந்திய நாட்டின் விடுதலையின்போது கிழக்கு வங்காளம் தனியாகப் பிரிக்கப்பட்டுப் பாக்கித்தான் நாட்டுடன் இணைக்கப்பட்டது. பிரிவினை நடந்துவிட்டது.

பின்னர் இடைவெளியாலும் மொழி, பண்பாட்டாலும் மாறுபட்ட வங்காளிகள் பாக்கித்தானுடன் இணைந்திருப்பதால் ஏற்படும் இடையூறுகளை உணர்ந்து பாக்கித்தான் நாட்டிலிருந்து பிரிந்துவிட முடிவெடுத்தனர். இந்தியாவில் உள்ள மேற்கு வங்க மக்களும் அங்கிருந்த அரசினரும் அதற்குத் துணை நின்றனர். எனவே இந்திய அரசு பாக்கித்தானுக்கு எதிராகப் படையை அனுப்பிக் கிழக்கு வங்காளத்தைக் கைப்பற்றியது. தன் பொறுப்பில் வந்த கிழக்கு வங்காளத்தை மேற்கு வங்காளத்தோடு சேர்த்து ஒரு மாநிலமாக்கித் தன் நாட்டில் இணைத்துக் கொள்ள வேண்டாமா? அன்று வங்காளப் பிரிவினையை எதிர்த்தவர்களாயிற்றே! ஆனால் அப்படிச் செய்திலர். வங்காள மாநிலமக்களின் விருப்பத்திற்கிணங்க அவர்களின் இனத்திற்காக அவர்களின் மொழி ஆட்சி செய ஒரு நாட்டை இந்திய அரசே உருவாக்கித் தந்தது. இது போற்றத் தக்க ஒரு செயலே ஆகும்.

அதே நிலை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. ஈழத்தில் வாழும் தமிழர்கள் - அந்நாட்டின் மூத்த குடிகள் - சிங்களரின் கொடுமையைத் தாளாமல் தனித்துவாழ விரும்புகின்றனர். தமிழ் நாட்டில் உள்ள தமிழர் கள் அதனை ஏற்கின்றனர்.

எனவேதான் கைப்பற்றிய நாட்டையே ஒரு தனிநாடாக்கிய இந்திய அரசு தானே உருவாகும் ஒரு நாட்டை ஆதரிப்பது தவறில்லையே! இந்திய அரசு இதில் தெளிவான முடிவுகாண வேண்டியது அதன் கடமையாகும். மேலும் ஈழந்தமிழர்கள் விடுதலை என்ற நிலையிலிருந்து தமக்கு உரிமையை நல்கும் கூட்டாட்சியை ஏற்குமளவிற்கு இறங்கி வந்துள்ளனர். இந்நிலை இந்திய அரசு இன்னும் வலுவாகச் செயற்பட உதவும் என நம்புகிறோம்.

www.padippakam.com



# கலிப்பாப் பற்றித் தொல்காப்பியர் கூறுவன

கலைமாமணி நூற்கடல் தி.வே. கோபாலையர் (தொடர்ச்சி)

ஒத்தாழிசைக்கலி இருவகைப்படும் என்றார். முதல்வகை அகநிலைஒத்தாழிசைக்கலி. அடுத்தவகை முன்னிலைக்கண் தேவரைப் பரவுதலாக வருவது. எனவே தேவரைப் படர்க்கையாகப் பரவுதல் தேவபாணி ஆகாது.

ஒத்தாழிசைக்கலியான் தேவரை முன்னிலைப் படுத்திப் பாடுவது இயற்றமிழ்த் தேவபாணியாம்.

**ஏனை ஒன்றே,**
**தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே - 138**

தேவபாணியாகிய ஒத்தாழிசைக்கலிப்பா வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா எனவும் ஒருபோகு எனவும் இருவகைப்படும்.

**அதுவே, வண்ணகம் ஒருபோகு என இருவகைத்தே - 139**

வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பா தரவு தாழிசை எண் வாரம் என்ற நான்கு உறுப்புக்களை உடையது. அவற்றுள் தரவாவது 4,6,8 என்ற இரட்டைப்படை எண்களில் அமைந்த அடிகளை உடையது.

இதன் தாழிசைகள் ஓசையானும் பொருளானும் அளவானும் ஒத்துத் தரவின் அடிகளைவிடக் குறைந்த அடிகளை உடையனவாக வரும்.

சுரிதகம் முதல் உறுப்பாகிய தரவினை ஒத்த அடிகளை உடைய தாகவே வரும். தரவினும் மிக்க அடிகளை உடையதாக வருதல் கூடாது.

எண் எனப்படும் அம்போதரங்கம் நாற்சீர் கொண்ட ஈரடியான் இரண்டும், நாற்சீர் கொண்ட ஓரடியான் நான்கும், முச்சீர் அடியான் எட்டும் இருசீரடியான் பதினாறும் பெற்று, முதலாவது தொடை அளவால் பெருகிநிற்கப் பின்வரும் தொடைகள் குறைந்துகொண்டே வரும்.

இவை முறையே பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண் எனவும் வழங்கப்பெறும். இடையெண்ணும் சிற்றெண்ணும் எட்டும் பதினாறும் எனப்பட்டவை நான்கும் எட்டுமாக வரினும் கொள்ளப்பெறும்.

முச்சீரடிகளை இருசீரடிகளாகவும் இருசீரடிகளை ஒருசீரடிகளா கவும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கொள்வர். ஒன்றற்கொன்று பாகமே சுருங்கவேண்டுதலின் முச்சீரடிகளை இவர்கள் கொள்ள வில்லை.

வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பாவில் தனிச்சொல் வரவில்லை எனின் அம்போதரங்கமும் வாராமல் தரவு, தாழிசை, சுரிதகம் என்ற மூன்று உறுப்புக்களை உடையதாகவே அப்பா அமையலாம் - என்பன வண்ணக ஒத்தாழிசைபற்றித் தொல்காப்பியம் கூறுவனவாகும்.

வண்ணகம் தானே,
**தரவே தாழிசை எண்ணே வாரம் என்று**
**அந்நால் வகையில் தோன்றும் என்ப - 140**

www.padippakam.com



தரவே தானும்
நான்கும் ஆறும் எட்டும் என்ற
நேரடி பற்றிய நிலைமைத்து ஆகும் - 141

ஒத்து மூன்று ஆகும் ஒத்தாழிசையே - 142

தரவின் சுருங்கித் தோன்றும் என்ப - 143

அடக்கியல் வாரம் தரவோடு ஒக்கும் - 144

முதல்தொடை பெருகிச் சுருங்கும்மன் எண்ணே - 145

எண்இடை ஒழிதல் ஏதம் இன்றே
சின்னம் இல்லாக் காலை யான - 146

சின்னம் என்பது தனிச்சொல் என்பர் இளம்பூரணரும் பாலசுந்தரனாரும், சின்னம் என்பது சிற்றெண் என்னும் கருத்தினர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும். எனவே, வண்ணக ஒத்தாழிசையில் சிற்றெண் வர, ஏனைய எண்கள் வாராதிருக்கலாம். ஏனைய எண்கள் வரச் சிற்றெண்மாத்திரம் வாராமல் இருக்கலாம். பேரெண் அளவெண் இடையெண் சிற்றெண் என்ற நான்கும் வருதல் வண்ணக ஒத்தாழி சைக்குச் சிறப்புத் தருவதாகும் என்பது அவர்களுடைய கருத்தாகும். எனவே, தொல்காப்பியனார் கருத்துப்படி வண்ணக ஒத்தாழிசையில் தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்ற ஐந்து உறுப்புக்கள் பெரும்பான்மையும் காணப்பெறும். பிற்காலத்தில் வண்ணக ஒத்தாழிசை தரவு, தாழிசை, அராகம்அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்ற ஆறு உறுப்புப் பெறும் என்ப (யா.கா.32)

தேவபாணியின் வண்ணக ஒத்தாழிசை அல்லாத ஒருபோகு என்பது இருவகைப்படும்.

ஒருபோகு இயற்கையும் இருவகைத்து ஆகும் - 147

அவை முறையே கொச்சக ஒருபோகு எனவும் அம்போதரங்க ஒருபோகு எனவும் கூறப்படும். ஒருபோகு என்பது ஓர் உறுப்பை இழந்தது எனவும் ஒன்றாகிய உறுப்பாய் நீண்டது எனவும் இருவகை யாகப் பொருள் செய்யப்படுகிறது. பிற்காலத்தில் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா என வழங்கப்பட்டுத் தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்ற ஐந்து உறுப்புப்பெறுவது என இலக்கணம் கூறப்பட்டது. (யா.கா.31)

கொச்சகமாகிய ஓர் உறுப்பை இழந்தது கொச்சக ஒருபோகு ஆகும். அம்போதரங்கம் என்ற ஓர் உறுப்பின் பெரும்பகுதியை இழந்தது அம்போதரங்க ஒருபோகு என்பர் ஒருசாரார்.

அடக்கியல் இன்றி அடிநிமிர்ந்து ஒழுகும் கொச்சக ஒருபோகு இருபதுஅடி அளவு நீளுதலாலும் அம்போதரங்க ஒருபோகு அறுபதுஅடி அளவு நீளுதலாலும், ஒருபோகு என்பது ஒருவகை நீட்சி என்னும் பொருளது என்பர் ஒருசாரார்.

கொச்சக ஒருபோகு அம்போ தரங்கம் என்று
ஒப்ப நாடி உணர்தல் வேண்டும் - 148

கொச்சக ஒருபோகு அம்போதரங்க ஒருபோகு என்ற இரண்டும் அடக்கியல் ஒழிந்த ஏனைய உறுப்புக்களான் ஒற்றுமைப்படுதலின் இவற்றின் வேறுபாட்டினை நுண்ணிதின் தெரிந்துகொள்ள வேண்டு தலின் 'ஒப்ப நாடி உணர்தல் வேண்டும்' எனப்பட்டது. - தொடரும்

www.padippakam.com



# மண்ணுலக வாழ்வு : வள்ளுவரும் பிளேட்டோவும்

முனைவர் ப. மருதநாயகம், இயக்குநர்,
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

(தொடர்ச்சி)

தனக்குத் தெரியாதது ஏதுமில்லை எனும் எண்ணத்தைக் கைவிட்டுப் பணிவோடும் தன்னடக்கத்தோடும் வாழ்வதே அறிஞனுடைய செயலென்பார் சோக்ரதர். அறியாமையை உணர்ந்து ஏற்றுக்கொள்ளும் அடக்கமே அறிவு என்பது அவர் எண்ணமாகும். அவரைப்பேரறிஞர் என்று இறைவாக்கு (Oracle) பாராட்டியபோது அன்னார் தான் தன்னுடைய அறியாமையை உணர்ந்திருத்தலால்தான் அறிஞன் என்று அறிவிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று பணிவோடு கூறினார். நாம் அறிஞர் என்று செருக்கோடு எண்ணிக் கொண்டிருப்பவர் அறிவில்லாதவரே என்று வள்ளுவர் கண்டிப்பார்.

வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. (844)

ஒருவனது அறிவு பெருகப்பெருக அவனது அறியாமையின் அளவை அவன் உணரமுடியும் என்னும் கருத்தை ஓர் உவமையாகத் தருவார் தமிழ்க்கவிஞர்.

அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. (1110)

பிளேட்டோவின் குடியரசு (The Republic) எனும் நூல் நேர்மை, முறை, நீதி என்று சொல்லப்படும் பண்பு பற்றி விரிவாகப் பேசுகிறது. முதல் பகுதி நேர்மை பற்றிய அன்றைய கருத்துகளைத் தொகுத்துத்தர, பின்னால் வரும் பகுதிகள் தனிமனித நேர்மை, அரசின் நேர்மை பற்றியும் இறுதிப்பகுதி இவ்வுலக வாழ்விலும் இறப்பிற்குப்பின்னும் நேர்மைக்குக் கிடைக்கும் பரிசுகள் பற்றியும் பேசுகின்றன. நேர்மைக்கு வெகுமதிகள் வெளியிலிருந்து கிடைக்குமாயினும் நேர்மைக்காகவே நேர்மையை மேற்கொள்வதே உயரியது என்பார் சோக்ரதர். நேர்மையுள்ளம் படைத்தவன் பரிசுகளின்றிடத் துன்புறுத்தப்படினும் நேர்மை தன்னளவிலேயே ஆன்மாவின் அகநிலை என்ற முறையில் நலம் உடையதாகும் என்பதே அவன் உணரக்கடவன்.

பார்த்தல், கேட்டல், அறிவு, உடல்நலம் ஆகியவை
போன்றே நேர்மையும் அவைகளால் விளையும் பயன்
களுக்காக மட்டுமல்லாமல் அவைகளுக்காகவே
பெறப்படவேண்டிய உயர்த்த பொருள்களுள் ஒன்றாகும்.
நேர்மை, அதனைப்பெற்றுள்ள மனிதனுக்குத் தன்னளவிலேயே
நன்மை செய்கிறது. நேர்மையின்மை அவனுக்குப் பரிசுகளும்
புகழும் இல்லாமல் செய்வதோடு துன்பமும் விளைவிக்கிறது.
(கார்ன்போர்டு 53)

மனிதனின் மகிழ்ச்சி பண்பாட்டோடு செயல்படுவதிலேயே
அடங்கியிருக்கிறது. பகுத்தறிவுள்ள உயிர் என்ற முறையில்
அவனது அறவுணர்வு என்பது வாழ்க்கையின் உண்மையான

www.padippakam.com



நோக்கமாகிய நல்லதை அறிதல் பற்றிய தெளிவான பார்வையாகும். (கார்ன்போர்டு 212)

நேர்மைக் கேட்டினும் நேர்மை அதற்காகவும் அது கொணரும் மகிழ்ச்சிக்காகவும் உயர்ந்ததாகும். தத்துவஞானியான மன்னனையும் கொடுங்கோலனையும் ஒப்பிட்டு முன்னவன் நேர்மையின் சின்ன மென்றும் பின்னவன் நேர்மையின்மையின் மொத்த உருவமென்றும் நற்பண்பிலும் நேர்மையிலும் முதலாக இருப்பவனே மிக மகிழ்ச்சியான வனென்றும் நேர்மையற்ற கொடுங்கோலன் உள்ள வுளைச்சலுக்கு ஆட்பட்டவனென்றும் பிறவிடக் கொடுங்கோலனின் கொடுங்கோன்மை அவனது நாட்டையும் ஆன்மாவையும் பீடிக்கும் என்றும் சோக்ரதர் விளக்குவார். (கார்ன்போர்டு 306)

குடியரசு நூலின் இறுதியில் எர் (Er) என்பானுடைய கதையைச் சொல்லிவிட்டு அத்தொன்மம் ஆன்மாவின் அமரத்துவத்தைச் சுட்டுவதோடு நாம் எப்பொழுதும் மேல்நோக்கிச் செல்ல வேண்டு மென்றும் அறிவின் துணையோடு எல்லாவற்றிலும் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் அறிவுறுத்துகிறது என்பார். அப்பொழுதுதான் நாம் இங்கு அமைதியான வாழ்வைப் பெறுவதோடு விளையாட்டுகளில் வெற்றிபெற்ற வீரர்கள் வெகுமதிகள் பெறுதல் போல், விண்ணுலகில் நேர்மையின் பரிசை அடைவோமென்றும் இங்கு மட்டு மல்லாமல் ஆன்மாவின் ஆயிரம் ஆண்டுப் பயணத்தின் போதும் நலம் பெற இயலும் என்றும் அத்தொன்மம் எடுத்தரைக்கக் காணலாம்.

வள்ளுவர் அறம் என்று குறிப்பிடுவது அது இம்மையிலும் மறுமையிலும் விளைவிக்கும் நன்மைகளுக்காவும் அதற்காக மட்டுமேயுங் கூட மேற்கொள்ளப் படவேண்டிய வாழ்வுப்பாதையாகும்.

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கும். (31)

அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லலை. அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. (32)

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. (36)

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல. (39)

வள்ளுவரும் சோக்ரதரைப்போல் அரசன் அறமுடையோனாதல் இன்றியமையாததென்பார்.

அறம் இழுக்காது அல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடையது அரசு. (384)

ஆயினும் வள்ளுவர் மறுமைப்பயன்கள் இல்லை யெனினும் ஒருவன் நேர்மையான வாழ்க்கையை மேற்கொள்ளுதலே சிறப் பென்பார்.

நல்லாறெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. (222)

- தொடரும்

www.padippakam.com



## பாவலர் அரிமா இளங்கண்ணன் மடல்

பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

புதுவை அரசு கலைபண்பாட்டுத் துறையினால் இவ்வாண்டிற்கான "தமிழ்மாமணி" எனும் மிக உயரிய விருதைத் தாங்கள் பெற்றமைக்காக நெஞ்சார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். உரியவருக்கு உரிய விருதினை வழங்கிச் சிறப்பித்த புதுவை அரசினையும் பாராட்டுகிறேன்.

கலைமாமணி பட்டம் பெற்ற திருமதி. சி. பூங்கொடி பராங்குசம் அவர்களுக்கும் கம்பன் புகழ் இலக்கியப்பரிசு பெற்ற புலவர் திரு. அரங்க. நடராசன் அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

23-11-2005 அன்று என் மகன் பே.பா.சரவணன் வழக்குரைஞராகப் பதிவு பெற்றமைக்கும் சட்டவியல் முதுகலை (எம்.எல்) பயில இடம் கிடைத்தமைக்கும் என் மகிழ்ச்சியினைத் தெரிவிக்கு முகத்தான் 'நற்றமிழ்' இதழ்வளர்ச்சிக்கு உரு.100 நன்கொடையாக அனுப்பி யுள்ளேன். பெற்றுக்கொள்க. மனமுவந்து இளம் வழக்குரைஞர் தொழிலில் முன்னேறத் தங்களது வாழ்த்தினை வேண்டுகிறேன்.

(வழக்குரைஞர் பெ.பா.சரவணன் அறத்துறையில் புகழ் பெற்று விளங்கிட நற்றமிழ் வாழ்த்துகிறது. - ஆசிரியர்)

## திருமண உறுதிப்பாடு

அகரம் திருக்குறள் தொண்டுழிய நிறுவன வழி தி.ஆ.உ0௲சு நளி கஅ ஆம் நாள் (03-12-2005) சாஆலாம், மலேசியா புட்பவதி - மணிவெள்ளையன் மகன் திருவளர்செல்வன் ம. இளஞ்சித்திரன் சுங்கைவே, மலேசியா செல்லம்மா - அம்மாசி இணையரின் மகள் திருவளர்செல்வி அ. தமிழ்ச்செல்வி திருமண உறுதிப்பாடு நிகழ்வு கிளானா செயாவில் நடைபெற்றது. இருவீட்டுச் சார்பாகத் திரு அ. இளவழகன் வரவேற்புரையாற்றினார்.

திரு. க. இராமமாணிக்கம், தமிழ்மறையாம் திருக்குறளிலிருந்து இறைவணக்கம், இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம் அதிகாரங் களை ஓதித் திருமண உறுப்பாடு நிகழ்வினை நடத்தினார்.

## விடுபட்ட பாடல் வஞ்சி விருத்தம் - 9 (கருவிளம்+கூவிளம்+ காய்)

கொடுஞ்சினம் பேய்மழை கொட்டியதால்
நடுங்கியே நீரினால் நலிவடைந்தே
முடங்கிய மக்களின் முகமலரத்
தொடங்குவீர் நற்பணி துடிப்புடனே!

- புலவர் திருக்குறள் நாவைசிவம், மாணற்பாறை.

அறிவியல் நுண்பொறி ஆற்றலினால்
செறிவும் மேற்றிசைச் செல்வரிந்நாள்
எறிவளி, பேரலை, நிலநடுக்கம்
எறிதர வாடுதல் என்னென்பேன்?

- பேரா. கி. சிவகுமார், விருத்தாசலம்

www.padippakam.com



## புதுமனைப் புகுவிழா

அகரம் திருக்குறள் தொண்டுழிய நிறுவன வழி தி.ஆ. உ0௬௬ நளி உ௭-ஆம் நாள் (12-12-2005) எண்.1, காப்பார் செத்தியா 38, தாமான் மேவா, காப்பார் மலேசியா எனும் இடத்தில் திருமலி உலோகநாதன் - நிறைமலி வாணிசிரி இணையரின் புதுமனைப் புகுவிழா நிகழ்வில் க.இராம. மாணிக்கம் வரவேற்புரையாற்றினார்.

திரு. மு. மணிவெள்ளையன் தமிழ் மறையாம் திருக்குறளிலிருந்து இறைவணக்கம், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம் அதிகாரங்களை ஓதி விளக்கம் பகன்று இருவரையும் வாழ்த்திப் புதிய இல்லத்திற்கு "முல்லைவாயில்" எனப்பெயரிட்டார். அ.தி.தொ. நிறுவனப் பொறுப்பாளர் திரு. சிரிபிரகலாதன் கலந்து கொண்டார்.


## வெளிவந்துவிட்டது

சந்தப்பாமணி புலவர் அரங்க. நடராசனின்
"இலக்கிய மணிகள்" என்னும் கட்டுரை நூல்
வாங்கிப் படியுங்கள்
176 பக்கங்கள் கொண்ட நூல் விலை உருபா 60/- மட்டுமே.
அஞ்சல் செலவு எங்களுடையது.

தொடர்புக்கு : புலவர் அரங்க. நடராசன்
அகத்தியர் அச்சகம்
17, முதல் தெரு, இராசய்யர் தோட்டம், புதுச்சேரி - 605 013.
தொலைபேசி : 2242396


## வருந்துகிறோம்

★ மேனாள் தமிழகத் தமிழாசிரியர் கழகத் தலைவரும் சிறந்த பாவலரும் நற்றமிழ் அன்பருமான புலவர் கி.த. பச்சையப்பனாரின் துணைவியார் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆ.கு. செயம்மாள் அவர்கள் 30-11-2005இல் சென்னைப் புதுவண்ணாரப்பேட்டையில் இயற்கை யெய்தினார். அன்னார் மறைவிற்கு நற்றமிழ் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

★ நற்றமிழ் அன்பரும் விரிவுரையாளருமான திரு இல. நடராசன் அவர்களின் துணைவியார் திருமதி செங்கேணியம்மாள் புதுச்சேரி, நெல்லித்தோப்பில் 01-12-2005இல் இயற்கையெய்தினார் அன்னார் மறைவிற்கு நற்றமிழ் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

- ஆசிரியர்

www.padippakam.com



## இந்திய நடுவணரசின் பார்வைக்கு

# கூட்டாட்சி முறையே பரிகாரம்

இலங்கையின் அதிபராக, மகிந்த ராசபட்சய பொறுப்பேற்ற பிறகு முதன்முறையாக இந்தியாவுக்கு வந்து பிரதமர் மன்மோகன்சிங்குடன் - இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறார். "இலங்கையில் போர் நிறுத்தத்துக்கு அரண் செய்வதை நோக்கமாகக் கொண்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் கூடிய விரைவில் ஆரம்பமாக வேண்டும்" என்பதற்கு இரு தலைவர்களுமே இப்பேச்சு வார்த்தையில் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு உத்தேச சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இந்தியாவின் பங்கு பணி பெரிய அளவில் இருக்க வேண்டும் என்று இலங்கை அதிபர் விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும் என்பதில் இந்தியாவின் கருத்தை அவர் ஏற்கத் தயாராக இருக்கிறாரா என்பதற்கான அடையாளம் தெரியவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரையில், ஈழப்பிரச்சினையில் வாசுபேயி ஆட்சியிலிருந்து மன்மோகன் அரசு வரையில் அனுசரிக்கப்பட்டு வரும் திட்டவட்டான தேசியக் கொள்கை உள்ளது. "கூட்டாட்சி அடிப்படையில் சனநாயக ரீதியாக இலங்கையின் கட்டமைப்புக்குள் - பன்முகக் கலாச்சார அமைப்பைக் கட்டிக்காக்கும் விதத்தில், எல்லா சமூகங்களும் ஏற்கக்கூடிய பரிகாரத்தை விரிவான பேச்சுவார்த்தை மூலம் காண வேண்டும்" என்பதுதான் அதன் அடிப்படை. சனநாயக ரீதியான பரிகாரம் என்றால், "எல்லா, குடிமக்களும் எல்லாவிதத்திலும் சமத்துவமானவர்கள் - குறிப்பாகக் குடியுரிமைகளில்! அடுத்து பன்முகக் கலாச்சாரக் கட்டமைப்பு என்றால் இலங்கையில் சிறுபான்மை மக்களான தமிழர்களின் மொழி - நாகரிகம் - கலாச்சாரத்துக்குப் பாதுகாப்பு மற்றும் வாழ்வுரிமை, சமத்துவக் குடியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பதே பொருளாகும். இந்தப் பரிகாரத்தை, "நெகிழ்வான கூட்டாட்சி அடிப்படையில் அல்லாமல் காண முடியாது. ஆனால் அதிபர் ராசபட்சயோ ஒருமுக அரசியல் அமைப்பின் அடிப்படையில், அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவதன் மூலம் தீர்வு காண முடியும்" என்ற புதிய பல்லவியைப் பாட ஆரம்பித்திருக்கிறார். இது - அவருடைய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டணிக் கட்சியான சே.வி.பி.யின் கொள்கையாகும். முன்னாள் அதிபர் சந்திரிகாவின் தலைமையில் நேற்று வரை சிறிலங்கா சுரந்திரக் கட்சியின் கொள்கை இப்பிரச்சி னையில் - கூட்டாட்சி அடிப்படையிலேயே தீர்வு என்பதாகவே இருந்து வந்தது.

ஒருமுக அரசியல் கட்டமைப்புக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்பதற்கு என்ன அர்த்தம்? பெரிய இனமாகிய சிங்கள இனத்தின் ஆதிகத்துக்கு - தமிழர்கள் உட்பட்டு வாழ வேண்டும் என்பதல்லாமல் வேறென்ன? பிறகு எப்படி இலங்கையின் அரசியலிலும் ஆட்சியிலும்

www.padippakam.com



பல்வேறு துறைகளிலும் சனநாயக அடிப்படையில் தமிழர்களுக்கு உரிய பங்கு கிடைக்க முடியும்? இச்சந்தர்ப்பத்தில் அரசியல் கடந்த - இனப் பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்ட மேதா விலாசத்தை ராசபட்சய காட்டத் தவறினால் இனப் பிரச்சினையே இலங்கையை விழுங்கி விடுவதைத் தவிர்க்க முடியாது போய்விடக்கூடும். 70 லட்சம் மக்களைக் கொண்ட சுவிட்சர்லாந்தில் நான்கு மொழிகள் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டு உலகின் மரியாதைக்குரிய செல்வ வளம் கொழிக்கும் நாடாக விளங்குகிறது. அதற்கு மூலவிசை அதன் நெகிழ்வான, தாராள கூட்டாட்சி அமைப்பே ஆகும். அப்படியிருக்க பேரினவாதப் பிடிவாதத்தால் தீராத பிரச்சினையாக ஈழத்தை ராசபட்சய ஆட்சி, சிக்கலாக்கி விடுவது தவிர்க்க முடியாதது. இந்தியாவுடன் வேறு எந்தவிதமான உடன்படிக்கையைக் காண ராசபட்சய விரும்பினாலும் ஈழப் பிரச்சினைக்கான தீர்வை நிபந்தனையாக வைக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தில்லி உள்ளாகக் கூடும். ஏனெனில் ஈழப் பிரச்சினையில் மனம் குமுறி நிற்கும் ஆறு கோடித் தமிழர்களின் உணர்வுகளை இந்திய அரசு உதாசீனப்படுத்திவிட முடியாது. இந்த உண்மையை ராசபட்சய புரிந்துகொள்வதைப் பொறுத்தே இருநாட்டு உறவுகளின் எதிர்காலம் அமைய முடியும்.

- நன்றி - தினமணி - 30-12-2005

## சமூகநீதி காத்த தந்தை பெரியார்!
## ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்ட பேரறிஞர் அண்ணா
## இவர்களுக்கு
## நன்றி பாராட்டும் தமிழ்விழா!
## 27 ஆம் ஆண்டு (குழந்தைகள் விழா) காணச்
## செம்மொழித் தமிழினத்தாரே திரண்டுவாரீர்!

வளரும் திருவள்ளுவராண்டு 2036, மார்கழித் திங்கள் 20ஆம் நாள் (4-1-06) புதனன்று பிற்பகல் 1 மணிக்கு மாண்புடைய இளைஞரேறு பெ. சண்முகநாதன் அவர்களின் தலைமையில் தமிழ்ப் பரிசளிப்பு விழா இளைஞர் ஆண்டெனச் சங்கே முழங்கெனக் கொண்டாடத் தமிழகம், மலேசிய நாட்டுச் சொந்தங்கள் இணையுடன் கொண்டாட எம்மினத் தமிழரைக் கைகூப்பி அழைக்கின்றோம்!

வருக! வருக!!

அன்புடன் வரவேற்கும்,

பெரி. ஞா. கார்த்திகேயன் (செயலாளர்)

தமிழர் அறநெறிக் கழகத்தின் குழந்தைகள் தமிழ்விழாக் குழு

No. 55, Cargate Dalla Yangon.

www.padippakam.com



# நற்றமிழ்க்கு வந்த நன்மடல்கள்

மிகுந்த எண்ணிக்கையில் கவிஞர்களின் அரிய கருத்துகளைத் தரமான முறையில் அச்சேற்றித் தமிழ்த் தொண்டாற்றிவரும் புலவர் மு. இறைவிழியனார்க்கு நன்றி.

நாளுக்கு நாள் கல்லூரி மாணவர்களின் நெஞ்சில் நற்றமிழ் வளர்வதை அறிகிறோம். நற்றமிழ்ப் பற்றாளர்களின் நெஞ்சை ஈர்க்கும் விதத்தில் பாராட்டுகள் அமைகின்றன.

சான்றாக, எங்கள் வேலூர் செந்தமிழ்க்கோ அவர்கள் தன்னை ஈர்த்த பாடல் எண்களைக் குறிப்பிட்டு மகிழ்ந்துள்ளது இன்பம் அளிக்கிறது. நற்றமிழிற் காணும் சொல்லாய்வும் கருத்தரங்கமும் அருமை. **- பெருமாங்குப்பம் சா. சம்பத்து.**

தமிழ்ப் பெண்களை இழிவாய்ப் பேசிய நடிகை குசுபுவுக்கும், சுகாசினிக்கும் பேச்சுத்திமிர் அதிகம். பண்பாட்டைப் பற்றிப் பேச இவர்களுக்கு என்ன தகுதி உள்ளது? அதுபோல் தமிழர் அல்லாதார் தமிழ்நாட்டு அரசியலில் தலையிட்டுத் தலைமையேற்றுத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சாட்டையால் அடித்ததுபோல் கூறியுள்ளீர்கள். பாராட்டுக்கள்.

ஐயா இறைவிழியன் அவர்களே நற்றமிழில் தமிழ்த் தேசிய அரசியலுக்கு கூடுதலாய் ஒருபக்கம் ஒதுக்கவும். தங்களின் பணிகள் சிறக்க வாழ்த்துக்கள். **- அருவை தமிழன்பன், அருப்புக்கோட்டை.**

திரு. இறைவிழியனார்க்குப் பாராட்டுப் பாடல்கள், மடல்கள் கருத்துரைகள் வந்துள்ளன. படிக்கப் படிக்கப் புதியதோர் இலக்கியத் தைப் படிப்பதுபோல் சுவையாக இருந்தன. அவற்றைத் தொகுத்துச் சிறிய நூலாகப் பாராட்டு மலர்களாக வெளியிடலாம்.

ஆசிரிய உரையாக குசுபு, சுகாசினி பேசியதைப் பற்றி எழுதியிருப்பது சரியானதாகும். தினமலரும் துக்ளக்கும் அவர்களைக் காக்கப் புரட்சிப் பெரியார் முழக்கம், தீக்கதிர் போன்ற இதழ்களே சரியான பதில் தந்துள்ளன. தமிழ் உணர்வே இல்லாத பிற மொழியினர், தமிழ் மொழியைப் பற்றியும் தமிழ் இனத்தைப் பற்றியும் பேசுவது, தமிழ்நாட்டில்தான் உள்ளது. தடி எடுத்தவன் தண்டல்காரன் என்பார்கள். அப்படித்தான் இன்றைய நிலை. தமிழ் மக்கள் விழிப்புற்று எழுந்து, நின்று, போராட வேண்டும். ஆம் தமிழ்ப் பகைவர்களை எதிர்த்துப் போராட வேண்டும். **- பாவை . நடவரசன், ஈரோடு.**

நற்றமிழாசிரியர் மு. இறைவிழியனார் தமிழ்மாமணி விருது பெற்றதைக் கார்த்திகைச் சிறப்பிதழ் முழங்கியது. பாவாணர் மழலையர் பள்ளி இடிக்கப்பட்ட செய்தியை மலேசியத் தமிழர் க.இராம. மாணிக்கம் சிந்திக்கும்படி இடித்துரைத்துள்ளார். புலம் பெயர்ந்த தமிழர்கள் தாம் தமிழை விழிபோலும் காத்து வருகின்றமை - அறிவில் உதைத்தது! புலவர் அரங்க. நடராசனின் 'நான் நம்ப மாட்டேன்' குறுந்தொகைப்

www.padippakam.com



பாடலைக் கண்முன்னே படம்பிடித்தக் காட்டியது. நூல் அறிமுகம் பகுதியில் 'பாட்டெனும் வாள்எடுப்பாய்' திறனாய பாவண்ணன் வாள் எடுத்து உள்ளார். கூடியமட்டும் கொடுத்தபடி தொடுத்த பாடல்கள் - ஐந்நூறு தொடுக்குமாறு கோரிக்கை விடுக்கிறேன். இதழ்தோறும் வளரும் கன்னியாக இப்பகுதி மட்டும் நவில்தோறும் நயம் வளர்ப்பது உண்மை! கருத்தரங்கம் பகுதியில் 'தொலைப்பேசி'க்குத் தொல்காப்பிய விளக்கம் சரியான மேற்கோள். பேணிக்காக்க வேண்டிய கருத்துப் பெட்டகம். கலிப்பா பற்றித் தொல்காப்பியர் கூறுவனவும் சிறந்த ஆய்வு. மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் மாண்புறப் பயன்சேர்க்கும். புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் கருத்தரங்க / இசை அரங்க நிகழ்வுகள் ஒலிப்பேழை குறுந்தகடு விழாவில் வெளியிட்டால் என்போன்ற வெளியூர் தமிழர்கள் விரும்பிக் கற்க வாய்ப்பு ஏற்படும். மேன்மேலும் வளர்ந்தோங்க வாழ்த்துகிறேன். - **சு. வேல்மணி, சேலம்.**

நான் நம்ப மாட்டேன். ஏன் என்றால் அவர் பொய் சொல்லமாட்டார் "மழைக்காலம் வருவதற்குமுன் நான் வந்துவிடுவேன்" என்று கூறிப் பிரிந்து சென்ற கணவன்,

கணவன் வாய்ச் சொல்லின் மீது வைத்திருக்கும் நம்பிக்கை

"மிகவும் சுவைத்துப் படித்தேன்". புலவர் அரங்க நடராசனின் குறுந்தொகை 21, ஓதலாந்தையார், அகநானூறு உரை போல் நல்விளக்கம், நன்றே!

"எங்கும் யாரிடமும் பொய் சொல்லா நான்" சுவைத்தேன். பொய்மையும் வாய்மையிடத்த என்பது வேறு!....

நான் படித்து விரும்பிய வஞ்சிவிருத்தம் - 8. எண்கள் : 9, 15, 23, 49, 67, 111, 122, 163, 171, 215 படிக்க, சுவைக்க இனியவை. பிறவும் தான். - **பித்தளை வணிகன்** மதுரை மாறன், திண்டுக்கல்.

மதிப்புயர் அய்யா வணக்கம். 'தமிழ்மாமணி' என்ற விருதை அரசிடமிருந்து பெற்ற தங்கட்கு என் பாராட்டுக்கள்! இது நல்ல செய்தி, மிக மகிழ்ச்சியான செய்தி, இதழில் தங்களின் உரை படித்தேன் நன்று. எல்லாம் நம் தமிழ் மக்கள் தரும் இடம்தான். இங்கே கண்ட கழுதைகளும் கண்ட படியும் பண்பாட்டை மீறிப் பேசும் நிலைமை உருவாகி உள்ளது. வணிகம் செய்யவந்த வெள்ளையன் நம் நாட்டைப் பிடித்து ஆண்டது போலவே இப்போதும் அரசியல், திரைப்படத்திலெனப் பல நிலைகளில் மாற்றாளின் நாட்டம் மிக அதிகமாகி வருகிறது! நியாயத்தை தட்டிக்கேட்டால் கருத்துச் சுதந்திரம் என்கிறார்கள்!

- **நாத்திக நந்தனார், சென்னை.**

'தமிழ்மாமணி' விருதோடு சரியா? ஏதாவது பணமிருக்குமா? இல்லை மரக்கட்டையா? எனச் சங்கமித்திராவின் கணைத்தொடுப்புகட்கு விடைபகரும் வண்ணம், புதுவை அரசு மாதம் ஆயிரம் ஆதாயமாக்கி அரவணைத்துள்ளமை வெகுவாக, மகிழ்வோடு பாராட்டப்பட வேண்டிய ஒன்று. - **புலவர். ந. ஞானசேகரன், திருலோக்கி.**

www.padippakam.com



## புதுவை அரசின் தமிழ்மாமணி விருது பெற்ற இறைவிழியனார்க்குப் பாராட்டுப் பா

நற்றமிழ் ஏடதனின் நாயகனே! எந்தமிழ்
கற்றவர் போற்றும் உளத்தினிலே - நிற்கும்
இறைவிழிய னாகவே நெஞ்சுள் நிலவ
நிறைகுட மாகவே நிற்க!

**- கதை. பாலசுப்ரமணியன், தி.கொ.அ.க.கல்லூரி.**

இறைவிழியர் என்னும் இனிய புலவீர்!
நிறைதமிழ் மாமணிதாம் நீவீர்! - நறைதமிழால்
பெற்ற விருதேபோல் பெற்றிடுவீர் சீரெல்லாம்!
எற்றைக்கும் வாழ்க இனிது.

**- புலவர் திருக்குறள் நாவை. சிவம், மணற்பாறை.**

மார்கழித் திங்களிதழ் கண்டேன். தங்களுக்குப் புதுவை அரசின் தமிழ்மாமணி விருது கிடைத்தது கண்டு மகிழ்ச்சியடைந்தேன்.

நற்றமிழ் தழைக்க
நற்றமிழ் இதழ் நடத்தும்
நல்லவராம் இறைவிழியனார்
நன்மை பலபெறுக!
நலமுடன் வாழ்க!

**- இராம. புட்பராசா, சிவகங்கை.**

## புதுச்சேரிப் பெண்ணெழுத்தாளருக்கு முதற் பரிசு!

இலண்டன் இராசேசுவரி அவர்களும், கோவைத் தமிழ் நேயம் ஞானி அவர்களும் நடத்திய 2005 ஆம் ஆண்டுக்கான பெண்ணெழுத்தாளர் சிறுகதைப் போட்டியில் புதுச்சேரிப் பெண்ணெழுத்தாளர் திருமதி. ப.இரா. கலாவதியின் சிறு கதையான 'தன்மானம்' முதற் பரிசு பெற்றிருக்கிறது. சென்ற ஈராண்டுகளும் இவர் அதேபோட்டியில் கலந்து கொண்டு சிறப்புத் தகுதிகள் பெற்றுள்ளார்.

**- பேரா. பசுபதி (தேவமைந்தன்), புதுவை.**

## தங்க. சங்கரபாண்டியன் அவர்களின் பாராட்டு மடல்

தாங்கள் புதுவை அரசு கலை பண்பாட்டு துறையின் சார்பில் 2005 ஆம் ஆண்டிற்கான "தமிழ்மாமணி" விருது பெற்ற செய்தி அறிந்து நெஞ்சம் மகிழ்ந்தேன் தங்களால் தமிழ்க் கலையும் பண்பாடும் வளமும் பொலிவும் பெறுமென நான் திடமாக நம்புகின்றேன். தங்கட்கு என் உளங்கனிந்த பாராட்டுகளையும் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களையும் அன்புடன் தெரிவித்து மகிழ்கின்றேன்.

படிப்பகம்

www.padippakam.com



# இறைவிழியனார்க்குப் பாராட்டு

❖ நற்றமிழ் ஆசிரியருக்கு எமது தமிழ்நலங்கெழுமிய வணக்கங்கள், புதுவை மாநில மாபெரும் விருதான 'தமிழ்மாமணி' விருது பெற்றமைக்கு என் சார்பாகவும் என் கல்லூரி சார்பாகவும் மனமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்லிதழாம் நற்றமிழின் மூலம் தமிழ்நலன் காக்கும் செந்தமிழ்க் காவலரே உங்களது தமிழ்ப் பணி மேன்மேலும் சிறக்க என்சார்பாகவும் என் தமிழ்த்துறை சார்பாகவும் நெஞ்சார்ந்த வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். - சி.ம. சிவஞானம், தி.கொ.அ.க.கல்லூரி.

❖ இதழில் வரும் அனைத்துக் கருத்துக்களும் சுவையாக உள்ளன தங்களுக்குத் தமிழ்மாமணி விருது கிடைத்திருப்பது மிக்க மகிழ்ச்சி யளிக்கிறது. என்னுடைய தோழிகளும் பேராசிரியர்களும் வாழ்த்துக்கள் சொன்னார்கள். தங்களின் தமிழ்ப்பற்று மேலும் சிறந்து விளங்குவதால் இன்னும் பல விருதுகள் தங்களுக்குக் கிடைக்கட்டும்.

- மு. சக்தி, சென்னை.

❖ தங்களுக்கு புதுவை அரசு 'தமிழ்மாமணி' என்னும் உயர் விருதினையளித்துச் சிறப்பித்துள்ளதை நற்றமிழில் கண்டேன். மிகவும் மகிழ்கிறேன். தங்களுக்கு என் மகிழ்வான பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விருதளிப்பு மேலும் மேலும் தங்களைத் தமிழிய தொண்டுகளைச் செய்ய ஊக்குவிக்கும் என்பதால் விருதளித்த அரசும் பாராட்டுதலுக்குரியதே. - பா. குறிஞ்சிக்குமரன், பரமக்குடி.

❖ தமிழுணர்வாளர்கள் பட்டத்திற்காகவோ, புகழுக்காகவோ, பாராட்டுதலுக்காகவோ எதிர்பார்த்து உழைப்பதில்லை. இருப்பினும் நும்போன்றவர்களை அரசும், தமிழுணர்வாளர்களும் நிதிபடைத்த பெருஞ்செல்வந்தர்களும் தாமாகவே முன்வந்து பாராட்டி, கவுரவித்து பொற்கிழிகள் தர வேண்டுவது நீதியான கடமையாகும். நீவிர் பெற்ற விருதுக்கும் உங்கட்கும், கவுரவித்த முதல்வர்க்கும், அரசுக்கும் எனது வாழ்த்துக்களும் நன்றிகளும் வணக்கங்களும் உரித்தாகுக.

- புரட்சிக்கொடி, பிரம்மதேசம்.

❖ நற்றமிழ் மாமணியீர்! நனி வணக்கம். பகுத்தறிவுச் செம்மல் சங்க மித்திராவின் வாழ்த்திற்கிணங்க, தமிழ்மாமணி விருதும் கலைமாமணி விருதும் பெற்ற சான்றோர்களுக்கப் புதுவை அரசு, திங்கள் தோறும் ஆயிரம் வெண்பொற் காசுகள் வழங்க இருப்பதறிந்து தமிழ் உள்ளங்கள் யாவும் மகிழ்கின்றன! தக்க சான்றோர்களை வாழ்த்துவதோடு, வாழும் காமராசராகத் திகழும் புதுவை முதல்வரையும் அரசையும் வாழ்த்தி மகிழ்கின்றன! தங்கள் நற்றமிழ் பணி மேன்மேலும் ஓங்குக! வாழ்க!

- ஆ.வே. இராமசாமி, வைரிசெட்டிப்பாளையம்.

படிப்பகம்

www.padippakam.com



# கொடுத்தபடி தொடுத்த பாடல்கள்

## வஞ்சி விருத்தம்-10

## கூவிளம்+கருவிளம்+ காய்

"வந்தநீ தமிழினை வளர்த்திட்டால்
உந்தனை உயர்த்திடும் உண்மைவழி
நந்தனைப் புகழ்பெறச் செய்தமிழே!
நொந்தனர் தமிழ்உயிர் எனநினையார்"
1. - புலவர். வேங்கடராசன், திருவரங்கம்.

காற்றுடன் முகிலது கலக்கிற்று
நாற்றுடன் மரமுயிர் நலிவுற்ற(து)
ஆற்றது வெ(ள்)ளமிக அழிவுதன்னைச்
சாற்றிட வியன்றிடா இன்னலதே.
2. - புலவர் த. தட்சணாமூர்த்தி, தி.ரா.பட்டினம்.

கூடிடு குலவிடு மக்களுடன்!
நாடிடு நலம்பல நானிலத்தில்!
பாடிடு தெளிதமிழ்ப் பாடல்கள்!
தேடிடு புகழினைச் சீருடனே!
3. - ப. அங்கயற்கண்ணி, புதுச்சேரி.

ஏடுகள் தமிழினை வளர்த்திடவே
நாடிடல் மிகமிக நல்வினையாம்
பாடுகள் பலப்பல பட்டிங்கே
சாடுவோம் அயல்மொழிக் கலப்பினையே.
4. - வில்லவன் ப். முத்தமிழ்வாணன், புதுச்சேரி.

நாணடா தமிழனே நீயுமின்றே;
காணடா தமிழ்மொழி வீழ்ச்சியைத்தான்!
வீணடா இருந்துமே வாழ்வதுதான்;
பேணடா தமிழ்நலம் பீடுறவே!
5. - செஞ்சடையான், திருக்கழுக்குன்றம்.

நற்றமிழ் நலம்பெற நாமிருப்போம்;
உற்றவ ருயர்வுறப் பார்த்திருப்போம்!
அற்றவர்க் குதவிட வாங்கிருப்போம்;
கற்றவர் வழிசெலக் காத்திருப்போம்!
6. - வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

பாடுவார் பிழைத்திடப் பணம்பறிப்பார்
கூடுவார் குலவுவார் குழியமைப்பார்
தேடுவீர் எவரெனத் தெரிந்துகொண்டால்
ஓடுவீர் ஒதுங்குவீர் உமைக்காப்பீர்.
7. - புலலர் கோ. தனபாலன், வில்லயனூர்.

நாடிய பொழுதினில் வரவிலைநீ
வாடிய பயிர்க்குயிர் தரவிலைநீ
கூடிய முகிலுனைப் பொழிந்ததனால்
ஓடிய கடும்புனல் அழித்ததுவே!
8. - வெ. பரமசிவபாண்டியன், சின்னாளபட்டி.

மற்றவர் உழைப்பிலே உயர்ந்திடவே
கற்றவர் பலமுறை மகிழ்ந்திடலாம்
கற்பனைத் திரைக்கதை முடிவினைப்போல்
அற்பராய்க் குறையினை அடைந்திடுவார்.
9. - தி. பக்கிரிசாமி, திருமலைராயன்பட்டினம்.

இல்லறம் இனிதென விளங்கிடவே
நல்லற வழிதனில் சென்றிடுவீர்!
சொல்லினில் சுவைதனைக் கூட்டிடவே
இல்லமும் மகிழ்ந்திடக் கண்டிடலாம்!
10. - க. சண்முக சிதம்பரம், தரங்கம்பட்டி.

தாமரை அரும்பிரு கால்களுடன்
காமுறுந் தளர்நடை பயில்வதுபோல்
மாமொழி யெனுந்தமிழ் கற்பதற்கே
போமெழில் குழந்தையின் மாண்பினிதே!
11. - புலவர் மா.சு. மணி, திருக்கழுக்குன்றம்.

வாடிய பயிர்களின் நிலைக்காக
வாடிய இராமலிங் கப்புலவன்
பாடிய நிறையருட் பாக்களைநாம்
பாடினால் நிலவுமே அமைதிநாட்டில்
12. - தி.ப. சண்முகம், திருக்காடுதுறை.

உள்ளது வெடிபொருள் என்றுரைத்துக்
கள்ளமாய்ப் புரளியைக் கிளப்பிநாட்டை
விள்ளரும் இடரினில் தள்ளுகின்ற
கள்ளரைக் களையெனக் களைந்திடுக!
13. - புலவர் பணிக்குன்றன், புதுவை.

நாடுவார் புலவர்தம் நயவுரையை!
கூடுவார் இவர்களின் கூட்டத்தில்!
பாடுவார் அவர்புகழ்ப் பதிகமாகக்
கேடிலாத் தகவினார் இன்னவரே
14. - புலவர் இடிமுரசார், சென்னை.

கோடியாய்ப் பொருளினைப் பெற்றிருந்தால்
நாடியே வருபவர் நிலையறிந்து
வாடுவோர் எனிலவர் வறுமையெலாம்
ஓடிட வழங்குதல் உயர்வாமே!
15. - கவிஞர் இராகவனார், மதுரை.

வாடுவோர் நலிவினை நன்கறிந்தே
தேடுவோர் பொருளினில் ஓர்பங்கை
நாடியே வழங்கிடின் வறுமையின்றிப்
பீடுற அவர்களும் வாழ்வராமே!
16. - இராமன், அதலை.

www.padippakam.com



கூர்மதி படைத்தவள் தமிழன்னை
தேர்பவர் தமிழ்வளம் நிறைபவரே!
நேர்வளர் பணிபல புரிவாரே,
பார்புகழ் தமிழ்நிறை மாமணியே!
17. - பாவலர் தேவமைந்தன், புதுவை.

பாடிடும் இசையினில் மூழ்காமல்
கேடுசூழ் நடிகரின் பின்செலாது
நாடிநல் லறிஞரின் நூல்படித்துத்
தேடிடு அறிவினால் நல்வழியை!
18. - மு. தமிழ்நிலவன், ஐயன்குடிப்பாளையம்.

தூண்டிய விளக்கொளி சுடர்வதுபோல்
வேண்டுவ பெறுவது வினைத்திறமே!
பூண்பதும் புனைவதும் அறிவானால்
காண்பதும் கணிப்பதும் கைவருமே!
19. - ப. சக்திவேலன், திருச்சி.

செம்மொழி தமிழினைக் கற்றறியார்
செம்மொழி அமிழ்தெனும் மெய்ம்மையினை
எம்முறை தனிலவர் செப்புகிறார்?
அம்முறை அனைத்துமே அருவருப்பே!
20. - அகன், திருச்சி.

ஆடியே அலுத்தவர் மறுமுறையும்
ஓடியே உலகினில் உழைத்தாலே
தேடிய பொருளுமே கைகூடும்
வாடியே வருந்துவர் மகிழ்வாரே!
21. - நா. பொன்னுசாமி, புதுவை.

பைந்தமிழ் பயின்றிடும் பண்பாலே
நைந்திடும் நலமிலாத் தீமையெலாம்
செந்தமிழ் செழித்திடச் செய்திடுவோம்.
வந்திடும் நலமெலாம் நமைநாடி.
22. - ஆ.வே. இராமசாமி, வைரிசெட்டிபாளையம்.

பன்னிரு விழிகளைக் கொண்டவனே!
பன்னிரு புயமுடைப் பெருமானே!
என்னிரு விழிகளி லிருப்பவனே!
நின்னிரு திருவடி தருவாயே!
23. - ச. திருநாவுக்கரசு, முசிறி.

நேரிய உணவுடன் நீள்நடையும்
சீரிய மனத்துடன் செந்நெறியும்
பாரினில் கடைப்பிடிக் கின்றவர்க்குப்
பேரிடர் அளித்திடா வன்நோய்கள்.
24. - கவிஞர். மருத்துவர் பெ. போத்தி, மதுரை.

கொம்பது முளைத்ததோ உமக்கென்றே
வம்பது விளைத்திடு சுகாசினியே
செம்மையே இலாதசொல் செப்பியநீ
வெம்பிய கனியென வீழ்குவையே!
25. - க. துரையரசன், வேலாயுதம்பாளையம்.

வாழவே வழியிது வாமென்பார்
வேழம துயிர்ப்பென விரைந்திடினே
பாழடித் துழப்புதற் காகாதே
ஊழலு மினியெழா தொழிந்திடுமே!
26. - த. ஆறுமுகன், சென்னை.

தாழ்விலாப் புலமையை விறைவிழிய
னாழ்மனந் தமிழினில் வைத்ததனாற்
சூழ்ந்தனர் பெரியவர் விருதுடனே
வீழ்ந்தனர் பொறாமையர் வியப்புடனே!
27. - பெ. சயராமன், கள்ளக்குறிச்சி.

பல்வளம் நிரம்பிய பைந்தமிழர்
நல்லுளம் மிகுதியாய்ப் பெற்றதனால்,
அல்லவர் தமரெனக் கொண்டதுடன்
வெல்வகை யறிந்திடா துழல்கின்றார்!
28. - ச. தமிழ்ச்செல்வி, கல்லை.

கூத்திகள் குசுபுவும் சுகாசினியும்
வார்த்தையில் வழங்கினர் மலங்களையே
ஆர்த்தது தமிழகம் அடங்கினரா?
போர்த்திடும் திரையுளே முடங்கினரா?
29. - மணிமொழியார், பொள்ளாச்சி.

சாதியை ஒழித்திடப் பாருங்கள்
நீதிகள் நிலைத்திடச் சீறுங்கள்
மோதியே கொடுமையைத் தீருங்கள்
ஓதியே உயர்ந்திட வாருங்கள்.
30. - அ. தமிழோசை, சிலம்பூர்.

நேர்மையை இழந்தவோர் செயலினாலே
நேர்ந்ததே கெடுதிகள் ஆயிரந்தான்
கார்முகில் கொடுத்தநீர் சேமிக்க
நீர்நிலைத் தடுப்புகள் இல்லையடா!
31. - க.வி. சனார்த்தனன், காஞ்சிபுரம்.

மண்மகள் மகிழ்வுற வளஞ்சேர்க்கும்
விண்முகில் பொழிமழை பல்லுயிரைக்
கண்ணெதிர் அழித்ததும் என்முறையோ?
எண்ணிட விழிமழை பொழிகிறதே!
32. - அகரமுதல்வி, பொன்மலை, திருச்சி.

வீடெலாம் தமிழ்மணம்; வீதியெலாம்
ஏடெலாம் இவண்பயில் கூடமெலாம்
நாடெலாம் அரசுசார் துறையெலாமும்
கூடுசெந் தமிழ்நலம் தேடுவமே!
33. - கோவி. கலியபெருமாள், அரியாங்குப்பம்.

தாய்மொழி தருமொழி எனவுரைப்போம்!
தாயினை மதிப்பவன் நாட்டினிலே!
தாயினை வெறுத்தவன் காட்டினிலே!
தாயகம் விரும்பிட வாழ்ந்திடுவோம்!
34. - இரா. தையல்நாயகி, வேட்டவலம்.

www.padippakam.com



ஓடுவர் உழைப்பினை ஒதுக்கிவிட்டுப்
போடுவர் கணக்கினைப் பொருள்பெறவே
ஏடுகள் இயம்பிடும் இலவயத்தை
நாடியே விடுவரே நல்லுயிரும்.
35. - வி. சங்கர், பருத்திபுத்தூர்.

இன்றுநாம் தமிழினம் எனவுணர்வோம்!
என்றுமே தமிழினைப் பேசிடுவோம்
குன்றிடாச் சிறப்பினை வழங்கிடுவோம்
நன்றுநாம் கலைகமள் போற்றிடுவோம்.
36. - வள்ளி, இராசந்தாங்கல்.

நற்றமிழ் தெளிவுடன் பேசிடுவோம்
நற்றமிழ் எளிதென எழுதிடுவோம்
நற்றமிழ் துளியுமே நலங்கெடாமல்
பொற்புடன் பளிங்கென மிளிர்ந்திடுமே.
37. - க. குருநாதன், வானூர்.

எந்தமிழ் கனவெலாம் கனிவாக்கும்
எந்தமிழ் புவியெலாம் புகழ்பாடும்
எந்தமிழ் நினைவெலாம் நிழலாடும்
எந்தமிழ் மனையெலாம் மாண்பாமே.
38. - பி. இராசேசு, வானூர்.

அன்புடன் தமிழ்மொழி கற்றிடுவேன்
பன்புடன் தமிழ்மொழி போற்றிடுவேன்
நன்றுநம் தமிழ்மொழி வளர்ந்திடவே
என்றுமே தமிழ்மொழி பேசிடுவேன்.
39. - ம. பச்சையப்பன், வானூர்.

ஞாலமே புகழ்ந்திடும் பொதுமறையைக்
காலனால் அழித்திடாத் தமிழமுதைப்
பாலனும் விரும்பிடும் கனிமருந்தைச்
சாலவும் அறிந்துமே சுவைத்திடுவோம்.
40. - அ. இலக்குமணன், திருநள்ளாறு.

கூவிளம் கருவிளம் காய்வரவே
பாவினை வரைந்திட வேண்டுமென்றார்!
ஆவலாய் எழுதிய பாடலினைத்
"தேவலாம்" எனமொழி கூறுவரோ?
41. - கவிஞர். தே. சனார்த்தனன், முதலியார்பேட்டை.

பெற்றவர் குழந்தையைப் போற்றுதல்போல்
நற்றமிழ் தெளிதமிழ் ஏடுகளைக்
கற்றவர் கனிவுடன் போற்றுதல்ஏன்?
சொற்றிறம் மிகுந்திடும் வாழ்வுறவே!
42. - கவிஞர் கி. பாரதிதாசன், பிரான்சு.

முத்தமிழ் இலக்கியச் சுவையறிந்தால்
எத்துணை இடர்களும் ஏகிடுமே!
இத்தரை மொழிகளில் பழமையதாய்
முத்தெனத் திகழ்வது தமிழ்மொழியே!
43.- பாவலர் வே. முத்தையன், முத்தியால்பேட்டை.

பூக்களின் நறுமணம் முகர்ந்திடுவோம்
பாக்களின் நயங்களைச் சுவைத்திடுவோம்
வாக்கினை அறத்தவர்க்(கு) அளித்திடுவோம்
நாக்கினை அடக்கியே நலம்பெறுவோம்!
44.- வே. பூங்குழலி பெருமாள், திரு.வி.க. நகர்.

சேர்த்திடப் பொருளினைத் துணிவோரே
சேர்த்திட அருளினைத் துணிவீரே
பேரினைப் பழியிலாப் பெற்றிடவே
சீர்பெறப் பணியினைச் செய்திடுவோம்.
45. - இரா. சிவமுருகன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி, மயிலம்.

குற்றமில் பிழைப்புடன் பெருவிருப்பாய்ச்
சுற்றமும் மகிழ்ந்திடும் அணியணியாய்ப்
பற்றுடன் உழைத்திட உயர்வுவரும்
பொற்புறத் தழைத்திடும் தமிழினமே!
46. - நா. எழிலரசி, கோணலூர்.

செந்தமிழ்ச் சிறப்பினைத் தெளியாதார்
சிந்தனை இலாதவர் சீரழிவார்!
வந்தனைக் குரியதாம் வான்தமிழைச்
சிந்தையில் விளைப்பவர் சீர்பெறுவார்!
47. - கற்பகம், பரதராமி.

எண்ணரும் இயல்தமிழ் இயம்பிடுவோம்
கண்ணரும் கவின்தமிழ் காத்திடுவோம்!
பண்ணரும் பயன்தமிழ் பரப்பிடுவோம்
மண்ணரும் மணித்தமிழ் போற்றிடுவோம்!
48. - படைக்களப் பாவலர், ஆர்க்காடு.

மூழ்கிய திரையினில் தலைமுறையே
தாழ்ந்திடும் மொழியினைப் பகைவராலே
வீழ்ந்திடும் திரையினில் மீனினமோ
வீழ்ந்திடும் விளக்கினில் பூச்சிகளோ!
49. - இரா. காயத்திரி, வைப்பூர்.

வாடியே கிடந்தபல் மக்களெலாம்
ஓடினர் பணம்தரு வாரென்றே
மூடிய கதவுகள் திறந்தவுடன்
ஈடிலா உயிரினை இழந்தனரே!
50. - சங்குவளவ. துரையன், கடலூர்.

நற்றமிழ் உயரவே நனியுழைப்பார்
நற்றமிழ் இதழ்தரும் "இறைவிழியர்"
நற்றமிழ் அவருடல் நலம்பெறவே
நற்றமிழ் வளர்ப்பவன் வாழ்த்துகிறேன்.
51. - து. ஆதிநாராயணமூர்த்தி, பரதராமி.

என்னென வருமென எதிர்பார்த்துக்
தன்பணி புரிபவர் தன்னலத்தார்!
என்னருள் தமிழ்மொழி ஏற்றமுற
என்றுமே உழைப்பவர் பொதுநலத்தார்!
52. - தேன்மொழி, ஆர்க்காடு.

www.padippakam.com



ஓங்கிட உயர்ந்திட உருவெடுத்துத்
தாங்கிடும் குலைகளைத் தலையிலேற்றுப்
பாங்குயர் உருவினைப் பெற்றவளே!
ஈங்குள மனிதரும் உமக்கிணையோ!

53. - ச. சத்தியா, வடலூர்.

வேகமும் விவேகமும் இருப்பவரே
தாகமாய்த் தவித்திடும் நிலையினர்க்கு
வேகமாய் உதவிட முனைந்திடுவர்
ஈகமே உயர்வென உணர்த்திடுவர்.

54. - க. உதயபாலன், விழுப்புரம்.

ஆடவர் மகளிரைப் படைத்தளித்தாய்!
ஆடவும் அடங்கவும் குணமளித்தாய்!
பாடவும் படிக்கவும் இடமளித்தாய்!
கூடவும் குலவவும் அருள்புரிவாய்!

55. - க. கார்த்திகேயன், விழுப்புரம்.

காவலர் இறையெனக் கருதுவார்கள்,
காவலர் ஒருசிலர், கொள்ளையர்போல்
கேவலம் புரிகிறார்; குடம்பாலில்
தூவிய விடமென ஆவார்கள்.

56. - ஆ. கோவிந்தராசலு, கரிக்கலாம்பாக்கம்.

செல்வமே அழித்திடும் நிலையினதாம்!
செல்வமே வளர்த்திடும் குணமுடைத்தாம்!
செல்வமே அழிந்திடும் இயல்பினதாம்!
செல்வமே வளர்ந்திடும் தகையினதாம்!

57. - க. குப்புசாமி, இரிசிவந்தியம்.

நல்லவர் நலம்பல புரிவதனால்
நல்லவர் எனவுமே பெயர்பெறலை!
அல்லவர் சிலருமே எதிர்த்திடலை
நல்லவர் எவருமே மதித்திடாரே!

58. - தி. உசா திருநாவுக்கரசு, விழுப்புரம்.

ஓம்புவர் ஒழுக்கமே உயிரெனவும்
சூம்புவர் இழுக்கினைப் புரிவதற்கே!
ஆம்பலாய் மலருவர் நலம்புரியச்
சாம்பலும் நலன்களைச் செயவைப்பார்

59. - கி. பாண்டுரங்கன், இரிசிவந்தியம்.

கங்கையும் கிருட்டிணா காவிரியும்
பொங்கிடப் புயல்மழை பெய்ததனால்
எங்கிலும் பயிர்களும் குடிசைகளும்
பொங்கிய மழையினால் அழிந்தனவே!

60. - காரை. இளங்கம்பன், புதுவை.

அந்நியர் அரசிலே தலைமையினால்
நொந்திடும் நிலையிலே மன்மெதற்காம்
வெந்திடும் நிலையினை அடைவதற்கோ?
சிந்தனை மனதினில் வேண்டாவோ?

61. - தி. மணிமேகலை, விழுப்புரம்.

தூயவர் சுடர்விடும் கதிரனையர்
தீயவர் கருகிய இருளனையர்
ஆயதும் இருவென அறிந்திடலை
ஆய்ந்திடு மனிதரே பகுத்தறிவீர்!

62. - தெ. தமிழ்ச்செல்வன், இரிசிவந்தியம்.

நாட்டினில் நலம்பல புரிந்திடவே
நாட்டினை வளமுடைத் தாக்கிடவே
நாட்டினின் நடப்பினை அறிந்தவரை
நாட்டிடல் நாட்டினில் நலம்பயக்கும்!

63. - சி. செந்தில்குமரன், விழுப்புரம்.

தேடினார் கருங்குழி வள்ளலாரும்
கூடினார் அடியவர் வடலூரில்
வாடினார் கருகிய பயிர்கண்டு
பாடினார் அருந்தமிழ் அருட்பாவே!

64. - அரச ஈசுவரி இளங்கோ, புதுவை.

சிங்களக் கழிசடை சீறியதால்
பொங்கினர் தமிழ்மதப் போர்ப்புலிகள்
எங்கிலும் வெடியொலி ஈழநாட்டில்
செங்கடல் எனநிலம் சிவந்தனவே!

65. - கோ. இளங்கோ பாண்டியன், புதுச்சேரி.

ஆற்றலும் அறிவுமே மிகுந்தவராய்ப்
போற்றலும் புகழுமே பெறுபவராய்
நாற்றிசை மனிதரும் திகழ்ந்திடினே
ஏற்றமே உலகினில் நிலைத்திடுமே!

66. - க. பாலமுருகன், விழுப்புரம்.

ஆவதும் அழிவதும் அவள்செயலில்
ஆவணம் அனைத்துமே இவன்பெயரில்
போவதும் வருவதும் யாரறிவார்?
சாவதும் துடிப்பதும் செயற்பயனே?

67. - தி. தமிழ்க்கொடி, ஆசனூர்.

ஈட்டிய பொருளினைச் செலவிடவே!
தீட்டுவர் திடமுடன் செயலினையே!
கூட்டிய வகையினில் உதவிடவே
நாட்டமாய் வசித்திடல் நலம்பயக்கும்.

68. - சு. இராசேந்திரன், இரிசிவந்தியம்.

பாங்குடன் பழியற வசித்திடலே
தேங்கிடும் பெருமகிழ் வெனவறிந்தே
ஓங்கிடும் பெரும்புகழ் நிலைத்திடற்குத்
தாங்கிடும் மனதினை அளித்திடுவாய்!

69. - ஆ. இராசு, இரிசிவந்தியம்.

கல்வியின் சிறந்ததே எதுவுமில்லை!
கல்வியின் உயர்ந்ததும் உலகினிலே
இல்லென இயம்புவர் பெரியவரே
கல்வியிற் பெரியவன் கம்பனன்றோ!

70. - இரா. தயாபரன், அரியலூர்.

www.padippakam.com



வான்மழை பொழிந்திட வளம்பலவும்
தேன்சுவை தருதலைக் கருத்திருத்தி
ஊனிலும் இனித்திடும் வகையறிந்து
மேன்மை மிளிர்ந்திடப் பழகினரே!
71. - அர. கிரிசாநாதன், இரிசிவந்தியம்.

பாய்ந்திடும் நதியினின் அழகினைப்பார்!
ஆய்ந்திடும் அறிஞனின் அறிவினைப்பார்!
ஓய்ந்திடும் மனிதனின் பெருந்துயரம்
காய்ந்திடும் நிலையினி நமக்கிலையே!
72. - இரா. சதாசிவம், இரிசிவந்தியம்.

ஏட்டினை அறிந்திட முனைபவரே
நாட்டினை அறிந்திடும் நிலையினராம்
ஏட்டினை வழியென மொழிந்திடுவர்
நாட்டினை விழியென உணர்ந்திடுவோர்!
73. - இரா. பொற்செல்வி, இரிசிவந்தியம்.

வாழ்வினில் உயர்ந்திட வழிவகுக்கும்
தாழ்வினை இதுவென விளம்புவதாய்
ஊழ்வினை ஒழித்திடும் வகையினையே
ஆழ்ந்திடப் படிப்பவர் அறிகுவரே!
74. - இரா. தெய்வீகன், சங்கராபுரம்.

அண்ணலும் அறிஞரும் கருத்தினிலே
திண்ணமாய் இருந்ததை அறிந்திடுவோர்
எண்ணமும் செயலுமே ஒருமித்தே
அண்ணலாய் அறிஞராய் வசித்திடுவர்.
75. - அர. இளம்பூரணன், விழுப்புரம்.

நாடுவீர் இறைவனைக் காண்பதற்கே
வாடுவீர் அருளினைப் பெறுவதற்கே
ஓடுவீர் அறிவினைப் பேணுதற்கே
ஆடுவீர் இறைநினைந் தெந்நாளும்
76. - வே.ம. பாலகிருட்டினன், விருத்தாசலம்.

கல்வியின் திறத்தினை அறிந்திடுவோர்
கல்வியில் கருத்துடன் விளங்கிடுவர்
கல்வியால் உயர்வினை அடைந்திடுவர்
கல்வியே உயிரெனக் கருதிடுவர்.
77. - அர. அருண்குமார், இரிசிவந்தியம்.

நற்றமிழ் விரும்புவோர் நலம்விளைய
நற்றமிழ் இதழினில் வெளியிடற்கு
நற்றமிழ் மொழியினில் கவிபுனைவீர்!
சொற்றிறம் பெருகிட மகிழ்ந்திடுவீர்!
78. - இரா. அரங்கநாதன், வீரசோழபுரம்.

இன்னலும் இடர்களும் சூழ்ந்தகாலை
அன்பதை அளித்திடா உறவுகளும்
மின்னலாய் மறைந்திடும் நட்புகளும்
மன்னியே இருந்திடும் உலகமிதே!
79. - த. கருணைச்சாமி, தேனி.

ஓய்விலா உழைப்பினை ஈந்தவர்கள்
ஆய்வினால் பலப்பல கண்டறிந்தார்
நோய்தனைத் துரத்திடும் நன்மருந்தால்
சேய்களும் மகிழ்கிறார் நன்னலத்தால்!
80. - இரா. அருமருந்தலைவன், திருமருகல்.

ஓடினார் உதவிடும் பணம்வாங்கத்
தேடினர் மரணமாம் எமனைத்தான்
ஓடினார் உதவினர் முதல்வரும்தான்
ஈடிலா உயிரது மீண்டிடுமோ?
81. - சூலூர்க் கலைப்பித்தன்.

செற்றமே அழிவினை உண்டாக்கும்
சுற்றமும் விலகிடும் உனைவிட்டே
பெற்றிடு பொறையினை வழித்துணையாய்
வெற்றிகள் குவிந்திடும் வாழ்வினிலே!
82. - ச. சீதாலட்சுமி, புதுவை.

பாவலர் படைப்பெலாம் பாராளும்
தூவலால் துயரெலாம் சுருண்டழியும்!
காவலாய் உலகினைக் காத்தருளும்
காவலர், கடவுளர் பாவலரே!
83. - ஆதவன், ஆர்க்காடு.

தேன்மொழி, மலர்க்கொடி, செந்தமிழ்க்கோ
மான்விழி, வளர்மதி, குறளரசன்
வானுயர் தமிழினில் பெயர்சூட்டு!
வான்மதி! தமிழ்ச்செயல் மறந்திடாதே.
84. - கோ. செல்லம்மாள், செங்கம்.

நாற்பதும் இரண்டுடன் வாழ்வுயிர்தான்
போற்றிட வழியிலை வீழ்ந்தனர்காண்
ஏற்பிலா செயலிது, பொறுப்பின்றிக்
கூற்றுவன் எடுத்திட விட்டனர்பார்.
85. - கு. கோவிந்தன், செங்கம்.

திங்களுள் சிறந்தது மார்கழியே
தங்கமாந் தரணியில் மார்கழியே
பொங்கலோ வருவது தையினிலே
மங்கலம் தருவது மார்கழியே!
86. - மு. சண்முகம், வந்தவாசி.

நாட்டினை மொழியினைக் கருதாமல்
கேட்டினைப் பரப்பிடும் விருப்பத்தில்
காட்டினில் திரிந்திடும் விலங்காக்கி
ஊட்டிடும் இலவசம் ஒழிவதெப்போ?!
87. - எழிலன், சென்னை.

ஆடியே நடிகையாய்ப் பெயர்பெற்றுக்
கோடியாய்ப் பணத்தினைக் குவித்தபின்னே
சோடையாய்க் கிடந்திட மனதின்றி
மேடையில் அரசியல் நடத்திடுவாள்.
88. - கவிஞர். பாலசுந்திரன் சேகபு, வேலூர்.

www.padippakam.com



நாட்டிலே நல்லவர்க் குற்றுதவ
ஏட்டிலே உதவிகள் எழுதிவிட்டார்
காட்டினார் எவரடா காசுபணம்
பேட்டையில் பிணிபசி ஓய்வில்லை.
89. - மு. இராம. கனகராசன், புதுவை.

நற்றமிழ் வளர்த்திடும் மாமணியே
கற்றிடும் இளைஞரின் மனதினிலே
பொற்புடன் உமக்குயர் இடமுண்டு
நற்புகழ் பெருகிட வேண்டுகிறோம்.
90. - செ. தமிழ்வாணன், மரகதபுரம்.

உன்னையே நினைத்தஎன் நெஞ்சத்தால்
என்னையே நினைக்கவே மறந்ததுடன்
நின்னையே சரணமே அடைந்ததனால்
துன்பமே துகள்களாய்ப் பறந்தனவே.
91. - சு. சிவானந்தன், மேல்பாக்கம்.

நல்லதோர் தமிழகம் படைத்திடவே
நல்லதே நினைத்திட முயன்றிடுவோம்
நல்லவர் இருப்பதைப் புரிந்துகொண்டு
மெல்லவே தமிழெழச் செய்திடுவோம்.
92. - செ. தமிழ், மரகதபுரம்.

வஞ்சகம் இலாதஓர் வாழ்வுதனில்
நெஞ்சகம் உறவினைச் செலுத்திடுதல்
நஞ்சிலா எழிலுடை உலகத்தில்
செஞ்சொலுள் கவிஞனே வாழுகின்றான்.
93. - இர. கிருட்டிணகுமார், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

அன்புகள் நிறைந்திடும் உறவுகளில்
என்றுமே மறைவிலா நினைவுகளில்
நன்றுமே நினைப்பதால் தித்திக்கும்
குன்றிடாச் சுவைதரும் எந்நாளும்.
94. - சு. சிவசங்கரி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

துள்ளியே செழித்தநற் றமிழகத்தை
வெள்ளமும், அலைகளும், வெடிமருந்தும்
கொள்ளைதான் அடித்தன கொதிக்குதுள்ளம்
கள்ளமா புரிந்தனர் கடைத்தமிழர்.
95. - பாவலர் பாக்கம் பிரதாபசிம்மன், சென்னை.

பேசுவீர் தமிழினி லென்றென்றும்
கூசுவீர் பிறமொழி கூறுதற்கே!
ஏசுவீர் புறமொழி தீதென்றே
வீசுவீர் கருத்தினை விளங்கிடவே!
96. - சிலம்பூர்க்கிழான்.

பொங்கலைப் படைத்திடப் பணிசெய்வோம்
திங்களை நிலையென நினைத்திடுவோம்
மங்கல மலரினை மணத்திடுவோம்
தங்கியே தமிழினை வளர்த்திடுவோம்.
97. - இரா.கு. அரங்கசாமி, தங்கவயல்.

எங்கணும் பரவலாய் நாற்றுநட்டுச்
செங்கயல் குதித்திட நீர்பாய்ச்சித்
தெங்கெனப் பயன்தரு நெல்விளையப்
பொங்கலை மகிழ்வுடன் படைத்திடுவோம்!
98. - அரிமா. இளங்கண்ணன், சென்னை.

எந்தமிழ் மறைவழி நடக்கின்றேன்
செந்தமிழ் திறத்தினை வளர்க்கின்றேன்!
முந்தைய புலவரார் மொழிவழியில்
விந்தைகள் விளைக்கவே உழைக்கின்றேன்!
99. - ஆர்க்காடு. அமுதோன்.

உண்மையாய்ப் பிறப்பதும் பின்னரிங்கே
உண்மையாய் இறப்பதும் இவையுணர்ந்தோர்
உண்மையாய்த் துறப்பதும் செல்வமெல்லாம்
உண்மையாய் மறப்பதும் நடக்குமிங்கே!
100. - பி. இராமகிருட்டிணன், சாணிப்பூண்டி.

நீர்வளம் நிலமதில் இல்லாமல்
சோர்வுடன் பயனிலாப் பொழுதினிலே
யாரிடம் வினவலாம் எனக்கருதக்
கார்முகில் கலைந்துமே வாட்டியதே!
101. - சா. இராசலிங்கம், திருவண்ணாமலை.

தாய்மொழி தமிழ்மொழி பேசுவோர்கள்,
தாய்வழித் தமிழ்வழித் தோன்றலன்றோ!
வாய்மொழித் தமிழ்மொழி தோன்றலென்றால்,
ஆய்மதித் தமிழரில் பிரிவேனோ?
102.- அருள்நிதி செ. இலிங்காளந்தபாரதி, நெய்வேலி.

வாழ்ந்திடும் வரையிலே பலதுயரம்
தாழ்ந்திடும் வரையிலே மதிப்புயரும்
ஆழ்ந்திடும் வழியினில் கல்விகற்க!
வீழ்ந்திடும் அறிவிலார் எழுந்திடலாம்
103. - பா. தனலட்சுமி, புதுவை.

பெற்றவர் தனிநலம் பாராட்டார்
மற்றெவர் இணையுளர் இவர்கட்கு?
குற்றமே அவரது நற்சொல்லைக்
கற்றவர் புறமிடச் செய்வதுவாம்!
104. - வெ. வித்தியா, புதுவை.

அந்தமும் தொடக்கமும் இல்லாத
கந்தரின் கலையினைக் கற்றிடவே
தந்திரத் தலைவனின் இடம்வருக!
அந்தவூர் முருகரின் மயிலமலை.
105. - ந. மோகனா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

அன்பிலே மனம்பறி போகுதம்மா
என்றுமே நினைக்கவும் செய்திடுவாய்
பண்பிலே நிலைத்திடச் செய்பவளே!
நன்றுநான் மகிழ்வுடன் பார்க்கின்றேன்.
106. - சு. திருநாவுக்கரசு, வீரபாண்டி.

www.padippakam.com



நல்லவை தினந்தினம் நிகழ்ந்திடவே
அல்லவை உலகினில் ஒழிந்திடவே
இல்லவள் வசித்திடச் செய்திடவே
இல்லறம் நிலைத்திடும் வாழ்வினிலே
107. - சு. இரேவதி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

மண்களில் வளங்களை பெருக்கிட்டால்
கண்களால் கருத்தினைக் கவர்ந்திட்டால்
பண்களால் இசையினை வளர்த்திட்டால்
பெண்களை அனைவரும் மதித்திடுவோம்.
108. - சு. மலர்க்கொடி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

பாடிடும் பறவையும் ஓய்வதில்லை
ஓடிடும் நதியெலாம் நிற்பதில்லை
ஆடிடும் மயிலினம் களைப்பதில்லை
காடுசெல் மனிதனின் சோர்வெதற்கோ?
109. - பு. அபிநயா, புதுவை.

விண்ணிலே பறந்திடும் மனிதனையும்
மண்ணிலே இறந்தவன் எழுந்ததையும்
எண்ணிலா இறைவனை நேரில்நான்
கண்டதும் கனவெனச் சொல்வேனா?
110. - அண்ணா. தருமலிங்கம், புதுவை.

காரெலாம் மழையினைப் பொழிந்திடவே!
தாரெலாம் மலர்களைத் தொடுத்திடவே!
ஊரெலாம் செழிப்புடன் வளர்ந்திடவே!
பாரெலாம் வளமுடன் வாழ்ந்திடவே!
111. - ம. செயலட்சுமி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

வன்முறை இழிதெனப் பலருரைத்தும்
வன்முறை இழைக்கிறார் கொடுமனத்தார்!
வன்முறை பெருகிடும் நிலைகுறித்தே
வன்முறை விரும்பிடார் வருந்துகிறார்!
112. - சா. சம்பத்து, பெருமாங்குப்பம்.

பன்மொழி பயின்றிடும் நிலைபெறினும்
நன்மொழி நனிமொழி காத்திடுவாய்!
வன்மொழி தமிழ்மொழி தனையழிக்க
முன்வரின் முனைமுறித் தோட்டிடுவாய்!
113. - வே. இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

கொள்பவர் கொடுப்பவர் இருப்பதாலே
நல்லிடம் நமக்கிலை உலகரங்கில்
வெல்நிலை அமைந்திலை இந்தியர்க்கே
சொல்கிறோம் இருவரும் திருந்திடுக!
114. - பித்தளை வணிகன் மதுரை மாறன், திண்டுக்கல்.

ஓடியே உதவிகள் வழங்குமிடம்
நாடியே குவிந்தனர் ஆயிரம்பேர்
கூடிய மனிதரின் தன்னலத்தால்
வாடிய மலர்களாய்ச் சிலர்மாண்டார்.
115. - புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி.

சாதியை மதத்தினைச் சார்ந்துவாழும்
சாதியர் மதத்தினர் தமிழரல்லர்!
ஆதியில் மதவெறி இருந்ததிலை!
பாதியில் புகுந்தது சாதியுமே!
116. - பெ. குமரவேல், பரங்கினி.

பைந்தமிழ்ச் சுவையினைச் சுவைத்திட்ட
முந்தையோர் உரனினைத் தலைவைத்துக்
கந்தனின் திருவடி கைதொழுது
சிந்தையில் பதிப்பதே விழுப்பமாகும்!
117. - ஆ. சத்தியா, கந்தாடு.

சொற்பொருள் நயமிகு தொடையழகும்
பொற்புறும் இறைவனின் புகழ்ப்பொருளும்
முற்புகும் சிவப்பிர காசரவர்
'கற்பனைக் களஞ்சியம்' கற்பீரே!
118. - பேரா. கி. சிவகுமார், விருத்தாசலம்.

நாப்படை வலிமையை அறிந்திருந்தும்
காப்பதும் அரசெனும் மடமையிலே
பாப்புனை புலவரோ அடிமையெனக்
கூப்பிய கரமொடு நிற்பதுவோ!
119. - பாவலர் கருமலைத்தமிழாழன், ஓசூர்.

அன்புடன் அகிலமே வாழட்டும்
இன்புறும் அறிவினைப் பெற்றிடவே
கண்களை விழித்துமே போரிட்டு
மின்னிடும் ஒளியினில் வாழ்ந்திடுவோம்.
120. - அ. சோலைத் தென்றல், தென்நெற்குணம்.

இன்றுநம் உலகினில் கற்றவர்கள்
என்றுமே நிலைபெற வேண்டுமென்றால்
தன்னலம் விடுபெறப் பொதுநலத்தை
என்றுமே மனதினில் நினைப்போமே.
121. - ம. பச்சையம்மாள், கிழக்குமேடு.

அன்பினால் எதையுமே அடைந்திடவே
தன்னலம் எதுவுமே பாராமல
நன்னலத் துடன்உழைத் திடின்இறைவன்
என்றுமே உடனிருப் பான்அறிக.
122. - கு. அம்மச்சி, ஆத்தூர்.

மும்பையில் இருந்திவண் வந்துவாழ்வைச்
செம்மையாய் நடத்திடு செல்வியேஎம்
அம்மையர் தமைவசை பாடியஉம்
அம்மையும் உமையினி மன்னியாரே!
123. - குளரசன், வேலாயுதம்பாளையம்.

காசெனில் உறுப்பினைக் காட்டுதற்கும்
கூசிடார் அறிவுரை கூறுவதோ?
மாசுறை நடிகையர் மறையோதல்
ஆசலோ? அறைகவான் றமைந்தோரே.
124.- பொறிஞர், செ.செ. தமிழவேள், சென்னை.

www.padippakam.com



அய்யனின் குறள்படி ஆண்டாண்டாய்
மெய்வழி உழைத்திடும் மேன்மையும்பார்
உய்வழி புளுகிடும் ஓரினத்தின்
பொய்முகம் கழற்றிடும் பொங்கலைப்பார்!
125. - மணிமேகலை குப்புசாமி, புதுவை.

நாடுவார் புலவரின் நயனுரையை!
கூடுவார் இவர்களின் கூட்டத்துள்!
பாடுவார் அவர்புகழ்ப் பதிகமாகக்
கேடிலாத் தகவினார் கிளர்ந்தெழுந்தே!
126. - புலவர் இடிமுரசார், சென்னை.

மானுடர் உயிரெலாம் தூசென்றே
வானுல கனுப்பிய அரசியலார்
தானுணர்ந் தொழுகிட வாக்களிப்போம்
ஊனுடன் உணர்வுடை நாமிங்கே!
127. - சு. இலம்போதரன், சென்னை.

இறைமுறை யாற்றிடக் கையூட்டா?
கறைபடிந் தார்க்கிலை நம்வாக்கே!
மறையுளம் பூண்முகத் திரைகிழிப்போம்!
சிறையடைப் போம்!கொடுஞ் செயல்தடுப்போம்!
128. - கருவை. மு. குழந்தை.

பாரினில் தமிழ்மொழி சிறந்திடவே!
ஊரெலாம் தமிழினைக் கற்பிப்போம்
சீருடன் தமிழ்மொழி விளங்கிடவே!
பேரொளி யெனத் தமிழ் திகழவேண்டும்.
129. - கு. முதற்பாவலர், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

விந்தைகள் விளைப்பவர் வியன்தமிழர்!
சிந்தையில் தெளிந்தவர் சீர்த்தமிழர்!
வந்தனைக் குரியவர் வளத்தமிழர்
முந்துவர் உயருவர் முத்தமிழாய்!
130. - சோழமாமல்லன்,

திட்டமே இலாதவர் நாளெல்லாம்
பட்டமே படிப்பெனப் படிக்கின்றார்!
வட்டமே இதுவென வாழ்வதனால்
மட்டமாய்ப் படித்தபின் தவிக்கின்றார்!
131. - ஆ. சோதிமலர், சி.ம.ம.கல்லூரி.

எண்ணிய செயல்களை இடைவிடாது
கண்ணிய நிலையினில் முடித்திட்டால்
புண்ணிய உலகினில் புகழ்பெற்றுத்
திண்ணிய மனதுடன் வாழ்ந்திடலாம்.
132. - கி. உதயகுமார், வந்தவாசி.

ஆற்றலால் அறிவொளி கூட்டிடுவோம்
போற்றிடும் அறிவியல் புகுத்திடுவோம்!
மாற்றமே மலர்ந்திட மகிழ்ந்திடுவோம்
காற்றென நிலைத்துநாம் நிறைந்திடுவோம்!
133. - ஆ. முகிலரசி, ஆர்க்காடு.

துன்பமே விளைந்திடும் காதலினால்
இன்பமே நிறைந்திடா(து) என்றறிந்தும்
உன்நினை விலேதினந் தோறுமென(து)
உன்னத கனவுகள் வாழ்ந்திடுமே.
134. - வை. சிவா, மயிலம்.

மாக்களை அறிவிலா அமைச்சராக்கும்
போக்கினை நெறிபிறழ் தமிழ்நாட்டார்
ஆக்கிடும் நெறியெனக் கொண்டதனால்
போக்கிலா நிலையினில் தமிழ்நாடு!
135. - இரா. தையல்நாயகி, வேட்டவலம்.

தென்றலாய்ப் பிறந்திடு நெஞ்சத்துள்
கன்றெனக் குதித்திடு கண்களுக்குள்
என்றுமே இருந்திடு நினைவுக்குள்
இன்பமாய் வளர்ந்திடு எனக்குள்ளே!
136. - வெங்கடேசு, கண்ணியம்.

கற்பினைப் பழித்தது காட்டெருமை!
நற்றுணை நவின்றது நச்செருமை!
பொற்பினை நிறுவுதல் யாருரிமை!
வெற்பெனப் படையுடன் விரைவீரே!
137. - வானவன், வெங்காலூர்.

பெற்றிடும் கரணியம் அறியார்க்கு
நற்றிறம் அறிந்திடா அரசாங்கம்
வற்றிட அழித்திடும் இலவசத்தால்
வெற்றெனத் தமிழகம் வெறிதாகும்.
138. - அ. செஞ்சுடரோன், நமச்சிவாயபுரம்.

வீட்டினில் கரைத்திடும் புளியினாலே
வாட்டிடும் வலியெலாம் ஏற்படுமாம்!
முட்சியில் வலியதாம் உடலென்னும்
கூட்டினைச் சிதைப்பதே அதுவாகும்!
139. - திருவாட்டி. க. கலையரசி, வானவரெட்டி.

நெய்கிற தொழிலினைச் செய்வோர்க்கு
நெய்தலை அமைத்திட இடத்தினையும்
நெய்தலுக் குரியதோர் தறியினையும்
நெய்தொழில் சிறந்திட உதவிடுக.
140. - திருவாட்டி. க. கீதா, விருகாவூர்.

பிள்ளைகள் அணிந்திட மட்டும்தான்
பள்ளியில் ஒருநிற சீருடையா?
வள்ளலை நிகர்த்திடும் ஆசான்மார்
வெள்ளையை உடுத்திடச் செய்தாலென்?
141. - புலவர். அய்யா. மோகன், கல்லக்குறிச்சி.

நற்றமிழ் இலக்கிய இதழ்களையே
பற்றுகள் நிலவிடப் படித்திடுவோம்
சொற்றிறம் பெறுவதே இதன்வழியாம்
நற்றமிழ் வளர்த்திட முயன்றிடுவோம்.
142. - அ. இரேவதி, வீரசோழபுரம்.

படிப்பகம்

www.padippakam.com



கோட்டமே கொடுத்தநம் கையாலே
நாட்டினை அழித்துமே ஒழிப்பதற்குள்
கோட்டையுள் விடுத்ததை வெளியேற்ற
வேட்டுகள் வெடித்திட விரட்டிடுவோம்.
143. - அய். இராவணன், நமசிவாயபுரம்.

ஏர்த்தொழில் புரிகுவர் அனைவர்க்கும்
சீர்மிகு கருவிகள் அனைத்தையுமே
ஓர்ப்புடன் கொடுப்பது நாட்டினது
சீர்த்தியை வளர்த்திடும் தேர்ந்திடுக.
144. - மோ. கலாநிதி, தேவபாண்டலம்.

கோட்டினம் எனப்புகல் எருமைகளும்
கோட்டுமா எனப்புகல் பன்றிகளும்
சேட்டையாம் செயல்செயும் குரங்குகளும்
கோட்டையுள் விடுத்திட நாடாமா?
145. - அய். இரணியன், நமசிவாயபுரம்.

சாலையில் விலகிடும் கால்நடைகள்
மாலையில் மணமலர் தொடுக்காதார்
நூலையும் மதித்திடா அரக்கியர்கள்
பாலையில் பதைத்திடும் உயிரிகளே.
146. - அ. தமிழ்விரும்பி, நமசிவாயபுரம்.

ஏர்த்தொழில் புரிகுவர் வாழ்வுநிலை
நீர்த்திடும் அவலமே பொய்யில்லை
மூர்க்கரே அரியணை ஏறியதால்
பார்த்திலர் எளியவர் வாழ்வுபெற.
147. - க. திருக்குறளரசு, கல்லக்குறிச்சி.

வித்தெனும் பொருட்களை ஒருசேர
வித்தகர் உழவரின் இடந்தேடி
மொத்தமாய்க் கொடுத்திடும் இலவசமாய்
மெத்தவும் சிறந்திடும் விளைபெருக்கம்.
148. - மோ. கலாபன், சின்னசேலம்.

பள்ளியில் குடித்திடும் ஆசான்கள்
பள்ளியில் உறங்கிடும் மாணாக்கர்
பள்ளியில் திருடிடும் முதலியர்கள்
பள்ளியை அழித்திடும் பெருநோய்கள்.
149. - அய். குறளினியன், நமச்சிவாயபுரம்.

ஊனினைக் கெடுத்திடும் கசப்புணவை
தேனினைத் தடவியே கொடுப்பதுபோல்
கூனிய உடலுடன் வளைந்திருக்க
மானியம் எனஒரு விலங்கிட்டார்.
150. - க. திருக்குறட்பாவை, கல்லக்குறிச்சி.

ஊணினைப் பெருக்கிடப் பெருந்துணையாம்
கேணியை அகழ்ந்திடும் செலவனைத்தும்
கோணிடா வகையிலே ஏற்பதுதான்
ஆணிவேர் பொருந்திய அரசாகும்.
151.- திருவாட்டி. மோ. குடும்பவிளக்கு, ஏமப்பேர்.

ஒன்றிய கருத்தினை உடையவரே
நன்றியைப் பெரிதென மதித்திடுவர்
குன்றிய உளத்தினர் செயலினிலே
நன்றது சிறிதுமே இருந்திடாதே!
152. - பா. விசயபாரதி, இரிசிவந்தியம்.

தாய்த்தமிழ் மொழியதன் நலம்காக்க
வாய்வழி யுதவியும் தொடரட்டும்
ஓய்விலாத் துணையுடன் ஒருங்கிணைந்து
பாய்புலிப் பலத்துடன் பணியாற்று.
153. - ந. நித்தியானந்தம், திருக்கழுக்குன்றம்.

வாக்கினை அளித்திடக் காசுபெறும்
போக்கினைக் கயவரும் செய்வதனால்
கூக்குரல் எழுப்பியும் பயனின்றி
ஏக்கமே தொடர்ந்திட வாழ்கின்றோம்.
154.- திருவாட்டி. மோ. பெரியம்மாள், இரிசிவந்தியம்.

முத்தமிழ் பயின்றிட முயன்றிடுவோம்
முத்தமிழ் வளர்ந்திட உழைத்திடுவோம்
முத்தமிழ் சிறந்திடப் பார்முழுதும்
வித்திட தமிழனே முனைந்திடுவாய்.
155. - ஆ. விசயகுமாரன், வீரசோழபுரம்.

இன்சுவை தமிழினை இகழ்ந்திடுவோர்
நன்னலம் அடைவது நிகழ்ந்திடாதே!
தன்னலம் கருதியே வசித்திடுவோர்
நன்னிலை பெறுதலும் நலமிலதாம்!
156. - கு. சுசீலாகுப்புசாமி, வீரசோழபுரம்.

ஊக்கமே உயர்வினைத் தருவதனால்
ஆக்கமாய் உழைப்பினைத் தருபவரே
ஏக்கமும் அகன்றிட உயர்ந்திடுவர்
தாக்கமும் தழைப்புமே முயற்சியன்றோ!
157. - இர. கணேசன், பழவந்தாங்கல்.

பைந்தமிழ் வளர்ச்சியை விரும்பிடுவோர்
பைந்தமிழ் எழுதிட விரும்பிடுவர்
பைந்தமிழ் நவின்றிடும் கருத்தினையே
பைந்தமிழ் நிலத்தினில் கடைப்பிடிப்பர்.
158. - நா. அறிவொளி, புதுக்கோட்டை.

பெண்ணின் அழகினை நினைப்பவரே
கண்ணினைப் படைத்தவன் புகழினையும்
மண்ணகப் படைப்புகள் அனைத்தினையும்
விண்ணக மழைத்துளி படைத்ததுவே!
159. - த. சந்திரசேகரன், புதுக்கோட்டை.

தன்னிலை மறந்தவர் துறந்தவரே
தன்னினும் சிறந்தவர் மலர்முகத்தைத்
தன்னினுள் ஒளியெனப் பதித்திடுவர்
முன்னவர் நவின்றதைக் கடைப்பிடிப்பவர்.
160. - த. தெய்வானை, வீரசோழபுரம்.

www.padippakam.com



நுண்ணறி திறத்தினைப் பெறுபவரே
நுண்மதி நுழைபுலன் மிகுந்தவராம்
நுண்ணிய அறிவினைப் பயன்படுத்தி
எண்ணிய செயலினை முடித்திடுவோம்!
161. - ஆ. இரவிச்சந்திரன், பழவந்தாங்கள்.

நல்லவர் சிலருமே வசிப்பதனால்
அல்லலும் அளவுடன் தடைப்படலை
இல்லென மறுத்திட இயன்றிடுமோ!
நல்லவர் வல்லவர் என்றறிக!
162. - த. பாண்டியன், வீரசோழபுரம்.

நூலகம் அமைந்திடும் முறையினையும்
நூலக விதிகளின் வகையினையும்
நூலகம் வருபவர் அறிந்திடலே
நூலகம் சிறந்திட வழிவகுக்கும்!
163. - ம. இளையாப்பிள்ளை, வீரசோழபுரம்.

பாரினைத் தழைத்திடச் செய்வதற்கே
தாரணி சுமையினைச் சுமப்பதற்கே
காரிகை அருள்மரி மணிவயிற்றில்
தாரகை நிகர்க்கவும் அவர்உதித்தார்.
164. - கா. நீலவேணி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

வேலனை நினைத்துநாம் தொழுதிட்டால்
காலமும் மகிழ்வினைத் தந்திடுவார்
பாலனாம் முருகனைக் கைத்தொழுதால்
காலனே மருண்டுடன் ஓடிடுவான்!
165. - இரா. சரண்யா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

கல்லெனக் கிடப்பது இயலாமை
கல்லெனக் கிடப்பதோ உன்உள்ளம்!
செல்லமே புரிந்துமா நடிக்கின்றாய்
இல்லென மொழிந்திடின் இறந்திடுவேன்!
166. - கு. மகாலட்சுமி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

நிம்மதி தொலைத்தனர் பொருள்பெறப்போய்
தம்மதி இழந்தனர் மழைஇருட்டில்
தம்முயிர் அகன்றிடச் சாய்ந்தனரே
வெம்பினேன் உறங்கிலேன் என்செயச்சொல்.
167. - கவிஞர். சசி, செங்கம்.

முத்தமிழ் செழித்திட வாய்த்தஉரம்
'நற்றமிழ்' இதழதை நடத்துதமிழ்க்
கொற்றவா, இறைவிழி, பெற்றவிரு
துள்ளதே உயர்தனி மாட்சிமையே!
168. - திருவாணன், திண்டுக்கல்.

ஆட்சியில் இருப்பவர் பேர்சேர்க்க,
ஆட்சியை எதிர்ப்பவர் ஊர்சேர்க்க
மாட்சியாம் உயிர்களும் மாய்ந்தனவே!
காட்சியாய்க் கதறலும் காய்ந்தனவே!
169.- தா. அன்புவாணன் வெற்றிச்செல்வி, காஞ்சிபுரம்.

கள்ளமில் மனத்தினில் நிறைபவனாம்
தள்ளுறும் கனத்தினில் தாங்குபவன்
வள்ளலாம் புரிவலம் உதித்ததிரு
நல்லநாள் மகிழ்வுடன் தொழுதிடுவோம்.
170.- கோ. வித்யாதாரணி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

நட்பினை உடையவர் நலம்புரிவர்
நட்டலின் இனியது இலையெனவும்
நட்டலே நலமெனப் புரிபவரும்
துட்டரை விரும்பிடல் இலையெனலாம்!
171. - கு. செல்வக்குமார், வீரசோழபுரம்.

தேர்விலே தவறுவோர் துவண்டிடுவர்
தேர்தலும் துவண்டிட வழிவகுக்கும்
தேர்ந்திடா நிலையினர் நெறியினிலே
தேர்ந்திடும் கருத்துகள் உதித்திடுமே!
172. - த. பாலசுப்பிரமணியன், முசிறி.

கல்வியே குறைவிலா நிலையினதாம்
கல்வியே அழிந்திடாச் சிறப்புடைத்தாம்
கல்வியும் ஒழுக்கமும் இணைந்ததுவே
கல்வியின் சிறப்பென உணர்ந்திடுவீர்!
173. - மு. செந்தில்குமரன், செங்கோட்டை.

தாயினும் உயரிய இடத்தினையே
தாயினின் மொழியது பெறுவதனைச்
சேயினம் அறிந்திடல் சிறப்புடைத்தாம்
ஆயிரம் முறையிதைப் பகர்ந்திடுவோம்!
174. - செ. பொன்னம்மாள், செங்கோட்டை.

கற்றவர் சிறப்பினைப் போற்றிடுவாய்
நற்றமிழ் தெளிவுடன் எழுதிடுவாய்
கற்பதால் கலைபல உணர்ந்திடுவாய்
கற்றலின் இறைவனை நினைத்திடுவாய்!
175. - வீ. புட்பா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

நல்லவர் நினைவதும் எப்போதும்
நல்லதைச் செய்திடச் சொல்லுமேஉன்
உள்ளமும் கெடுதலைச் செய்யாமல்
உள்ளதை நினைப்பதே இன்பமாகும்.
176. - மு. சத்தியா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

தேசமே நிறைந்திடின் பற்றுடையார்
மோசமே விளைந்திடா என்றென்றும்
நேசமே வளர்ந்திடும் வாழ்வினிலே!
ஈசனை வணங்கிடின் துன்பமில்லை!
177. - சு. இளவேனிலரசன், திருக்கோவிலூர்.

கற்பினிற் சிறந்தவர் அனைவரையும்
கற்பினிற் சிறந்தவர் எனக்காண்பர்
கற்பிலார் அனைவரும் தம்மைப்போல்
கற்பிலார் எனக்கரு துவதியல்பே.
178. - ப. குருநாதன், திருவள்ளூர்.

www.padippakam.com



அன்பினால் வருவது சொந்தமாகும்
பண்பினால் பெறுவது மதிப்பாகும்
கண்களால் பிறப்பது காதலாகும்
என்றுமே நிலைப்பது கல்வியாகும்.
179.- வ. அரிகிருட்டிணன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

இன்பமாய் இறைவனை வணங்கிடுவோம்
பண்பினால் மனத்தினை வளர்த்திடுவோம்
அன்பினால் உறவினைச் சேர்த்திடுவோர்
என்றுமே தடைகளை வென்றிடுவார்.
180. - வே. மாயகிருட்டிணன், கரசானூர்.

புத்துயிர் அளித்திடும் புதுவருடம்
முத்தென வருதலை அறிந்திடுவோம்
வித்தகர் விருதினை அடைந்திடட்டும்
முத்தமிழ் உலகினில் சிறந்திடட்டும்.
181.- வ. பிரியா, சுசீலா ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

நல்வினை நினைத்தலே நம்கடமை!
இல்வினை சிறப்புறல் நம்பண்பு!
பல்வினை பொறுப்புடன் செய்திடலால்
அல்வினை வராமலே வாழ்கின்றோம்.
182. - மு. சிவா, மேல் சேவூர்.

எத்தனை தவறுகள் செய்தாலும்
அத்துணை மனிதரை மன்னித்தும்
இத்துணை மனதிலும் உயர்ந்தோராய்
இத்திரு உலகிலே வாழ்கின்றார்.
183. - ச. விசயலாவண்யா, திருச்சி.

வெற்புடை அரசனின் திருமகளே!
பொற்புடை மதிமுகன் மனையாளே!
நற்குணக் கருநிறன் உடன்பிறப்பே!
வெற்றிகள் வரிசையாம் உனைப்பணிய!
184. - இரா. அபிராமி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

ஓங்கிடும் புதுமைகள் பெற்றிடுவாய்
தாங்கிடும் புவியினில் புகழ்பெறவே!
தேங்கிடும் பழமைகள் அகற்றிடுவாய்,
ஈங்குள குலமுறை அழிந்திடவே!
185. - இரா. தமிழ்அழகன், திருக்கழுக்குன்றம்.

வானினும் விரிந்துள திருத்தமிழில்
தேனினும் சுவைமிகு திருக்குறளில்
பானிகர் மறைகுவிந்(து) இருக்குமது
வேனிலின் மலர்களாய் மணந்தருமே.
186. - புலவர் வீ. வில்வநாதன், வெங்காலூர்.

பெண்ணினம் சிறந்திடப் போற்றிடுவோம்
மண்ணிலே நிலைத்திட உழைத்திடுவோம்
அன்னைதான் உயிர்எனக் காத்திடுவோம்
அன்பினை நிலையென நினைத்திடுவோம்.
187. - ஏ. மணிகண்ணன், தி.கொ.அ.க.கல்லூரி.

காதலன் அருகினில் இருக்கையிலே
ஆதர வளித்திடும் வெண்மதியே
காதலன் அகன்றதும் நெருப்பெனவே
வேதனை தருவது கொடுஞ்செயலே.
188. - வாழியூர் வே. இராசவேலன், வாழியூர்.

சீருறும் கருத்துகள் சிறப்புடனே
நேருறும் வகையினில் கொண்டதுகான்
தேருறும் திருக்குறள் எனவுணர்ந்தே
பாருறப் பரப்புதல் நம்கடனே.
189. - இராச. பேரரசு, வாழியூர்.

மானென உடம்பினைச் சொன்னவனே
தேனினை இதழினில் கண்டவனே
மேனியில் கரங்களால் தொட்டவனே
காணியில் புதைந்துடல் போய்விடுமே!
190. - பா. மஞ்சுளா, விருத்தாசலம்.

தாவிடும் முடியினில் கருமையிலே
மேவிடும் முகிலினம் கொண்டவளே
கூவிடும் குயில்குரல் இனிமையினை
நீவிடும் குரலினில் கேட்டேனே.
191. - கதை. பாலசுப்ரமணியன், சிதம்பரம்.

வந்தது புதுவரு டம்;அங்கே
தந்தது குதுகலம் கொண்டாட்டம்!
வெந்தது உடல்,உயிர் உளம்;இங்கோ
தந்தது நிவாரணம் திண்டாட்டம்!
192.- தமிழ்மகான் நண்பர்கள், தி.கொ.அ.க.கல்லூரி.

அன்புடன் கதிரவன் எழுந்திடவே
இன்புடன் எருதினைச் சீராட்டிப்
புன்னகை மலர்ந்திடும் பொங்கலென்று
வண்டமிழ்த் தமிழனாய் வளர்ந்திடுவோம்!
193. - மு. ஆனந்தன், தி.கொ.அ.க.கல்லூரி.

தென்றலே திறன்மிகு சிந்தனையே
என்றுமே முருகனை நினைத்திருப்பேன்!
அன்பினை அமிழ்தென அறிந்திடவே
இன்புடன் மதிமுகம் கொண்டிடடா!
194. - க.கு. கவியரசு, தி.கொ.அ.க.கல்லூரி.

எங்கிலும் இனியநம் தமிழ்காத்துத்
தங்கிடும் சிறப்பெலாம் காத்தோம்பி
மங்கல இசையுடன் இனித்திடவே
பொங்கலை மகிழ்வுடன் பொங்குவமே!
195. - புலவர் செ. இராமலிங்கன், புதுவை.

பேணுவார் அரும்பொருள் சிறப்புறவே!
நாணுவார் இழிசெயல் புரிந்திடவே!
காணுவார் கலைகளில் உயர்வினையே!
பூணுவார் அறிவெனும் அணியினையே!
196.- உலே. சுப்பிரமணியன், புதுப்பெருங்களத்தூர்.

www.padippakam.com



ஊனமே மனத்தினில் ஊன்றிடாமல்
தானமே கொடுத்திடும் கைப்பெற்று
மானமே பெரிதென வாழ்ந்திட்டால்
வானமும் வசப்படும் உன்வழியில்.
197. - இரா. ஏழுமலை, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

கூவியே அழைத்துமே வரவில்லை!
ஆவியே துடிப்பினும் ஆளில்லை!
தாவியே மனிதனைத் தேடுகையில்
பாவியே பகர்ந்தது பரமனொலி!
198. - திருமதி. பாவை, கூடுவாஞ்சேரி.

கண்ணினுள் அரும்பிய கருணையதே
பண்ணினால் மலர்ந்தது விரைவாக
எண்ணியே செயலினைத் தொடங்கிடுவோம்
மண்ணினுள் இருப்பவர் அனைவருமே.
199. - செ. சுபத்ரா, தி.கோ.அ.க.கல்லூரி.

தேடிய விழியினில் நின்றவளே!
வாடிய முகத்துடன் வாழ்கின்றேன்
பாடிய கவிகளும் வழித்தவறி
ஓடிடும் நிலையினை உணர்வாயா?
200. - அ. சரவணன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

வள்ளுவர் பெருந்தகை வாய்மொழியைத்
தெள்ளிய உணர்வுடன் தேர்ந்தவர்கள்
நள்ளிருள் தடத்தினில் நல்விளக்காய்க்
கொள்ளுவர்; குறைகளைத் தள்ளுவரே.
201.- முனைவர். வே.ச. திருமாவளவன், புதுவை.

ஊக்கமும் முயற்சியும் பேருழைப்பும்
ஆக்கமும் தரும்அத னோடன்றித்
தேக்கிடும் புகழினை நீள்நிலத்தில்;
ஊக்குக முயலுக உழைத்துயர்வீர்!
202. - கூத்தரசன், புதுச்சேரி - 13.

எத்தனை வளர்ச்சிகள் இருந்தாலும்
எத்தராய் இருப்பவர் செய்கின்ற
அத்தனை அழும்புகள் தம்மாலே
மொத்தமாய் அழியுதே பாரதமே!
203. - தெ. முருகசாமி, புதுச்சேரி.

வந்தவர் வளமுடன் வாழுவதேன்
சொந்தமும் துயரொடு வாடுவதேன்
நொந்தழும் நிலையினில் தேம்புவதேன்
கொந்திடும் கழுகுகள் கூடுவதேன்
204. - மு.வே. கங்காதரன், சென்னை.

தாரிலே கரும்புகள் மொய்ப்பதுபோல்
பாரிலே துயர்களும் தொடர்வனவே!
மார்பிலே கணையினைத் தொடுத்திடநீ
தேர்ந்திடு கலைகளில் வல்லவனாய்
205. - இ. தனசேகரன், தென்நெற்குணம்.

உள்ளமும் ஒழுங்குடன் அமைந்திட்டால்
கள்மனம் உலகினில் பெருகிடாது.
பள்ளமே நெருங்கிடா நம்வாழ்வில்
உள்ளமும் இறைவனை நினைத்திட்டால்
206. - இர. கல்பனா, தென்நெற்குணம்.

இன்பமும் தொலைந்ததே என்நெஞ்சில்
புண்களாய் வலித்தன நினைவலைகள்
கண்களும் மயங்கின ஒளியிழந்தே
என்னவள் வரவினை எதிர்ப்பார்த்து.
207. - அ. செயபால், சி.பா.சு. த.கல்லூரி.

அன்பினால் தமிழ்மொழி வளர்த்திடுவோம்
பண்பினால் மனிதனை மதித்திடுவோம்
பண்களால் விடுதலைப் பாடிடுவோம்
என்றுமே முருகனைத் தொழுதிடுவோம்.
208. - இர. சத்திதாசு, சி.பா.த.தமிழ்க்கல்லூரி.

தேடினர் அனைவரும் கடவுளரை!
பாடினர் இசையுடன் இறைவனையே!
தேடினர் இறைவனின் திருவடியை
நாடினர் அனைவரும் கண்டனரே!
209. - இர. மாலதி, மயிலம்.

"கந்தனின் முழுப்பெரும் அறிவாலே
செந்தமிழ் வளர்பிறை ஆயிற்றே
உந்திருக் கதிர்வடி செம்பொருளால்
எந்தனுள் அருட்குணம் பெருக்கிடுக"
210. - ஏ. கௌசல்யா, திண்டிவனம்.

தேடியே பொருளினைத் தினந்தினமும்
ஓடியே களைத்திடும் மனிதர்கள்
நாடியே அமைதியைக் காண்பதெல்லாம்
பாடியே முருகருள் பெறும்போது.
211. - து. விவேகானந்தன், புதுவை.

தேடிடும் பொருள்தனில் நெறியில்லை
பாடிடும் கவிதையில் பொருளில்லை
நாடிடும் செயல்தனில் நலமில்லை
கூடிடும் குறைகளோ குறைவதில்லை!
212. - பாவலர் இரத்தின. சின்னசாமி, புதுவை.

"ஓடிடும் நதியினைத் தடைசெய்தே
பீடுடை அணைகளை அமைத்திடுவோம்
வாடிடும் மனிதரும் பயிர்வகையும்
கூடிடும் வளமெலாம் கொண்டிடவே!"
213. - பாவலர். கு. தட்சணாமூர்த்தி, புதுவை.

நாட்டினர் உழைத்திடத் துணிந்திட்டால்
வாட்டிடும் வறுமையும் வந்திடுமோ?
நீட்டிடும் துயரமும் நின்றிடுமோ?
ஏட்டினில் எழுதியும் இன்புறலாம்!
214. - இல.அ. அகத்தியன், சிறுமிளை.

www.padippakam.com



இன்பமாய் விழுகிளா ஓவியத்தில்
என்னவள் மலர்முகம் வெற்றிடவே
அன்புடன் அவள்மனம் மகிழ்ந்திருக்க
என்றுமே இறைவனை வேண்டுகிறேன்.
215. - இரா. நாகராசன், திரு.கொ.அ.க.கல்லூரி.

ஆங்கில வருடமோ பிறந்ததனால்
பாங்கனாய் இருந்துநாம் மகிழ்ந்திடுவோம்
ஆங்கிலம் வளர்ந்துமென் தமிழ்மொழிக்குத்
தீங்கினைக் கொடுக்குமேல் மிதித்திடுவேன்.
216. - த. மணிகண்டன், ஊ. கொளப்பாக்கம்.

பெற்றெடுத் தவர்களை வணங்கிடுவோம்!
மற்றவர் சிறப்பினை உணர்ந்திடுவோம்!
கற்றலின் நெறியினை உணர்த்திடுவோம்!
நற்றமிழ்ப் புகழினைப் போற்றிடுவோம்!
217. - அ. அண்ணாதுரை, தி.கொ.அ.க.கல்லூரி.

பொன்னிற மலர்க்கொடி யேகேளாய்!
உன்னிடம் கனவினில் ஓராண்டாய்
எண்ணிய கிளவியை எடுத்தியம்பப்
பண்ணிய முயற்சியில் வெற்றிபெற்றேன்.
218. - க. கிருட்டிணமூர்த்தி, சி.பா.சு.த.கல்லூரி.

கற்றிட முருகனும் அருள்புரிவான்
சுற்றிடும் மயிலினி லேவந்து
பற்றிடும் குமரனின் பார்வையிலே
நற்றமிழ் சுவைதரும் பாரினிலே.
219. - ஞா. சுபத்திரு, சி.பா.சு.த.கல்லூரி.

நல்லதை மனத்தினில் நீநினைத்தால்
சில்லெனக் கலைமகள் அருள்புரிவாள்!
செல்வமும் நிலையுடன் இருப்பதன்று
கல்வியை இனிதென நீ சுவைப்பாய்!
220. - கே.கு. வீரவேல், தி.கொ.அ.க.கல்லூரி.

"முன்னமே அருவெனத் தோன்றியவன்
மன்னனாய் உலகினை நடத்துபவன்
அன்பெனும் பொருளினில் அகப்படுவான்
எண்ணினேன் தினந்தோறும் பழமலையை!"
221. - வீ. சிவபெருமான், எ. வடக்குப்பம்.

"கூடுவேன் நலமுடன் வகுப்பறையில்
சாடுவேன் மனிதனின் பிழைகளையே
பாடுவேன் முருகனின் திருப்புகழை!
நாடுவேன் முருகனின் திருவடியே"
222. - சி.ம. சிவஞானம், தி.கொ.அ.க.கல்லூரி.

சொல்லுக நயவுரை நலமோங்க;
நில்லுக குறள்வழி குடியோங்க;
புல்லுக அறிஞரை நட்போங்க;
செல்லுக தெளிவுடன் வெற்றியோங்க!
223. - சா. கண்ணன், புதுச்சேரி.

"நாடுக தமிழினை நலமுறவே!
சாடுக தமிழினைப் பழிப்பவனை!
கூடுக தமிழினைக் காப்பதற்கு!
தேடுக தமிழனே நல்வழியை!"
224. - சோ. இளஞ்செழியன், புதுச்சேரி.

"ஆழ்ந்தகன் றகல்வியும் நற்பண்பும்
சூழ்ந்தநட் புமினிதாய்க் கொண்டென்றும்
தாழ்ந்திடா மலேவுல கில்நன்றாய்
வாழ்ந்திடக் குறளினை ஏற்போமே!"
225. - சோ. கனிமொழி, புதுச்சேரி.

"காய்ந்தளம் நதிகளும் நீர்நிறைந்து
பாய்ந்திடப் பொழிந்தநல் மழையேநீ
சாய்ந்திடப் பயிர்களை யழித்தனையே!
மாய்ந்திட மனிதரைக் கெடுத்தனையே!"
226. - சோ. அருமை சுந்தரி, புதுச்சேரி.

"அன்புடன், அறிவுடன் வாழ்ந்திட்டால்,
நன்மைகள் பெருகியே நலம்கிடைக்கும்!
துன்பமும் மறைந்திடும், துணிவுடன்நல்
இன்பமும் நிறைந்திடும்! வாழ்வோமே!"
227. - ஆ. அறிவரசன், புதுச்சேரி.

நற்றமிழ் உயர்ந்திடத் தமிழ்நாட்டில்
நற்பணி சிறப்புடன் செய்பவரே
கற்றிடும் தமிழினம் வாழ்த்திடவே
சொற்களஞ் சியர்புகழ் இறைவிழியர்!!
228. - மு. சக்தி, மாநிலக்கல்லூரி, சென்னை.

காய்கனி பயறுகள் கானுறுதேன்
தாய்முதல் அனைவரும் சாப்பிட்டால்
நோயெதும் இலாமலே நூறாண்டு
மாயிரு நிலத்தினில் வாழ்ந்திடலாம்!
229. - மு. குறளகன், கருவூர்.

வாதிடும் வழக்குரை அறிஞர்களும்
சோதிடம் உரைத்திடும் சோதிடரும்
வேதனை புரிந்திடும் பொய்யுரைத்து
வாழ்தலின் இறத்தலே மாண்புடைத்தாம்!
230. - ச. தேன்மொழி சண்முகம், கரூர்.

சூதினை, மதுவினைத் தூய்மையில்லா
மாதினை, புலவினை, வாய்மையில்லாக்
காதலைக் கரவினைக், கருத்துடையோர்
மோதலைத் தவிர்த்திடின் மொய்ம்புறலாம்!
231. - பு. சித்திரா புகழேந்தி, கரூர்.

வாடிய பயிரினைக் கண்டவுடன்
வாடிடும் மனத்துடன் வாழ்ந்திட்டார்
கேடெதும் உளத்தினில் நினையாமல்
பீடுடை நடையுடன் உயர்ந்திட்டார்
232. - கொ. வெற்றிச்செல்வி, சென்னை.

www.padippakam.com



மாமுனி சுரர்களும் மனிதரேதான்
தாமினி தவித்திடும் வழியதனைக்
காமமென் தடைதனைத் தவிர்த்திடினே
நாமுமே தரணியில் கடவுளடா!
233. - சி.பு.சு. தாண்டவன், தழுதாளி.

ஆணவம் உனக்கது அழிவுதானே
மானமே உயர்ந்ததின் மாண்பாகும்
வானமே உயிர்நலம் பெறச்செய்யும்
தானமே நமதுயிர் தனைக்காக்கும்.
234. - து. சசிகலா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

சிந்தனை செழித்திட முயன்றிடுவோம்!
நிந்தனை மனிதரை விலக்கிடுவோம்!
கந்தனை வழிபடப் பழகிடுவோம்!
செந்தமிழ் தழைத்திட உழைத்திடுவோம்!
235. - செ. இராசலட்சுமி, கள்ளக்குறிச்சி.

காலையில் விழித்ததும் நான்விரைந்தேன்
ஆலைபோல் பணிகளில் ஆழ்ந்துழன்றேன்
வேலையை விழிப்புடன் செய்ததனால்
ஞாலமே புகழ்ந்திட நானுயர்ந்தேன்.
236. - குழல்மொழி, ஆர்க்காடு.

வெள்ளமோ அழித்தது வாழ்க்கையை
கொள்ளவே உதவியைக் கூடிநின்றோர்
தள்ளலில் விழுந்துயிர் விட்டார்கள்
உள்ளமோ நெருப்பினில் உறவினர்க்கே!
237. - புலவர் அ. பொன்னையன், புலிகரம்பலூர்.

வந்தவர் மதித்தனர் மண்பிறந்தோர்
செந்தமிழ்ச் சிறப்பினைத் தேர்ந்திலரே!
சிந்தனைத் துணிவிலர்; சீரழிக்கும்
வந்தயல் மொழியையும் நீக்கிலரே!
238. - செ.அ. கார்க்குழலி, ஓடாக்கநல்லூர்.

வாழ்ந்திடும் உயர்மொழி தமிழ்மொழியை
ஆழ்ந்துநீ படித்திட உயர்ந்திடுவாய்
தாழ்ந்ததை வணங்கியே இடைவிடாமல்
வீழ்த்திடு கலந்திடும் மொழியினையும்.
239. - க. சக்திவேல், நெய்வேலி.

ஏடெலாம் மணந்திட எழுதிடுவோம்
வீடெலாம் எழிலுறப் பேசிடுவோம்
நாடெலாம் பரவிட உழைத்திடுவோம்
ஈடிலாத் தனித்தமிழ் மேன்மையுற!
240. - புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

கொன்றிடு தமிழனே குறைதனையே
ஒன்றிடு தமிழனே கொள்கையினில்
கண்டிடு தமிழனே தமிழ்ப்பகையை
வென்றிடு தமிழனே எதிரியினை!
241. - புலவர் சி. வெற்றிவேந்தன், பாகூர்.

ஈடிலா உழைப்பினர் இவ்வேழைகள்
வாடுவர் பசியினில் உணவின்றி!
நீடிய உழைப்பிலாச் செல்வந்தர்
தேடுவர் பொருள்களைப் பேரளவில்!
242. - இரா. ஏமலதா, மா.ஆ.க. நிறுவனம்.

நல்லுளம் தழைத்திடும் தமிழ்த்தலைவா!
வல்லுளம் தளர்ந்திடும்; இவ்வுலகில்
அல்லலை அகற்றியே உயர்வடைய
இல்லெனா தெனைஉளத் தேற்றருள்வாய்!
243. - க. அன்புக்கோகிலா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

தூய்மையாய் இருப்பவர் உள்ளநாடும்
தாய்மையைப் புரப்பவர் உள்ளநாடும்
வாய்மையில் உயர்ந்தவர் பிறந்தநாடும்
தாய்த்திரு புகழுடை நாடாகும்.
244. - தே. கோமதி, புதுவை.

## பாடல் படைத்திடுக

வஞ்சி விருத்தம் - 11

வந்தது பொங்கலோ பொங்கலெனும்
இந்தநாள் உங்களின் வாழ்வுயர்த்தி
முந்துறச் செய்வதாய் அமைகவெனச்
சிந்தையால் வாழ்த்துவேன் வாழியவே!

1. ஒவ்வோரடியிலும் மூன்று சீர்கள் இருக்க வேண்டும்.
2. ஓரடியின் சீரமைப்பு முறையே : கூவிளம்+கூவிளம்+காய்
3. இவ்வாறமைந்த நான்கடிகள் ஒரெதுகை பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறமைந்த பாடல் ஒன்றை விரும்பிய பொருளில் இயற்றி, வரும் 31-1-06 க்குள் விடுக்க.

- புலவர் அரங்க. நடராசன்

www.padippakam.com



# பாவலர்கள் பார்வைக்கு

1. நற்றமிழில் பாடற் பயிற்சிப் பகுதியில் மொழியறிஞர் பாவாணர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோருடன் பயின்ற பழகிய பெரும் பாவலர் பலரும் பாடல் எழுதுகின்றனர். அப்படி அவர்கள் எழுதுதல் நற்றமிழின் வளர்ச்சிக்கு உதவுவதும் சிறப்பளிப்பதுவும் ஆகும். அதே நேரத்தில் அவர்தம் பாடல்கள் வளரும் பாவலர்க்குச் சான்றுப் பாடல்களாகவும் பயன்படும். எனவே நற்றமிழின் வழி நற்றமிழை வளர்க்க முயலும் அன்னாரை நற்றமிழ் பாராட்டுகிறது.

2. சிலர் கொடுத்த இலக்கணத்தைக் கருதாமலே பாடலை யாத்து அனுப்புகின்றனர். பாடல் எழுத விருப்பம் உள்ளவர் மட்டுமே இலக்கணமுறையைக் கருத்தில் கொண்டு எழுதுக.

3. சிலர் நற்றமிழில் விளம்பரம் தேடவிரும்புகின்றனர். எல்லாரும் பாவலர் ஆகிவிடல் முடியாது. எனவே ஒருவரே பல பாடல்களை எழுதி மற்றவரின் கையொப்பத்துடன் அனுப்பும் முறையைக் கைவிடுக. விருப்பமும் திறனும் உடையார் மட்டும் எழுதுக.

4. தமிழில் பெயர்கள் ர,ல, ஆகிய எழுத்துகளால் தொடங்குதலும் க்,ச்,ட்,த்,ப்,ற் ஆகிய எழுத்துக்களால் முடிதலும் இல. வடமொழி எழுத்துக்கள் ஸ,ஜ,ஷ,க்ஷ,ஹ ஆகியன இடம் பெறல் கூடாது.

5. தமிழ்க்கல்லூரி மாணவர் சிலர் பாடலின் கீழ் By என எழுதிக் கையொப்பமிட்டுள்ளனர். இது முறையா?

6. நற்றமிழ் தமிழ் உணர்வை உருவாக்கவும் தமிழர்களை உண்மைத் தமிழர்களாக மாற்றவும் அவர்கட்கு இலக்கண அறிவையும் பாடற்சுவையையும் ஊட்டவும் பாடுபடும் இதழ். இதில் விளம்பர ஊழல் உருவாக வழி ஏற்படுத்துதல் வேண்டா என வேண்டிக் கொள்கிறேன்.

- ஆசிரியர்

## பொங்கல் வாழ்த்து



நற்றமிழ் அன்பரீர்! நல்ல வளமெல்லாம்
உற்று மகிழ்வோ ருயர்கவெனப் - பொற்றமிழ்ப்
பெங்கல் திருநாளில் போற்றிய வாழ்த்தினை
உங்களுக்கும் தந்தோம் உவந்து.

இவண்,
ஆசிரியர், இணையாசிரியர்கள்.

www.padippakam.com



# கருத்தரங்கம்

தொ.நா. 425 இன்படி **அல்வழியில்** ஆறு ஈறும் (எல்லாமொழியும்) இயல்பாய் முடியும். ஆனால் வன்தொடருக்கு எடுத்துக்காட்டு தரப்படவில்லை. தந்திருக்க வேண்டும். தராதது உரையாசிரியரின் குறை. "வன்தொடருக்குக் காட்ட அரிது என்றதனால் விட்டனர் போலும்' என்று முனைவர் தெ. முருகசாமி குறிப்பிட்டுள்ளார் (பக்கம் 31) அதற்கு எடுத்துக்காட்டு தருவது அரிதன்று. எளிதே கொக்கு பறந்தது என அவரே எடுத்துக்காட்டைத் தந்துள்ளார். அது சரியே. ஏனெனில் எழுவாய்த் தொடரும். (அ.பி.ப.ப.) விளித்தொடரும் அவ்வழித் தொடர்களாகும். ஆனால் அவரே 426 ஆம் நூற்பாவின்படி வலி மிகுத்துக்காட்டினும் சரியே என்கிறார்.

425 ஆம் நூற்பாவின்படி **அவ்வழியில்** எல்லாக் குற்றுகரங்களும் **வலிமிகாது. 'எல்லா'** என்பதால் வன்தொடர்க் குற்றியலுகரம் அதில் அடங்கியிருக்கிறது. மீண்டும் அடுத்த நூற்பாவிலேயே (426) வன்தொடர் பற்றிய புணர்ச்சிவிதியைக் கூறுகிறார் என்றால் **முன்பு சொன்னது அல்வழிக்கு, இப்போது இந்த நூற்பாவில் சொல்வது வேற்றுமைப் புணர்ச்சிக்கு என்று கொள்ள வேண்டுமன்றோ?** அதற்கேற்ப கொக்குக் கால் முதலான எடுத்துக்காட்டுகளைத்தர வேண்டுமன்றோ?

எனவே **425 ஆம் நூற்பாவையடுத்து,** (58 அல்வழிப் புணர்ச்சிக்கானது)

**'வல்லொற்றுத் தொடர்மொழி வல்லொற்று மிகுமே'** என்ற நூற்பாவை (426) **வேற்றுமைப் புணர்ச்சிக்குரியதாகக் கொண்டு, அதற்கேற்பவே எடுத்துக் காட்டுகளைத்தர வேண்டும்.**

**- மாசில் மகிழ்நன்,** (ச.மு. விமலானந்தன்)
தமிழ்மன்றத் தலைவர், திருப்பத்தூர்.

புலவர் மாசில் மகிழ்நனார் நூற்பாவில் 'எல்லா' என்பதால் வன்றொடர்க் குற்றியலுகரமும் அடங்கும் எனக் குறிப்பிடுகிறார். அஃது உண்மையே, ஆனால் வன்றொடரோடு நான்கு கணமும் வருமொழி முதலாக வந்து புணருங்கால் உயிர், மெலி, இடை ஆகிய மூன்று கணங்கள் வருங்கால் மிகுதல் இன்று என்பதனால் நான்கில் மூன்று என்ற பெரும்பான்மையால் தான் 'எல்லா' எனக் குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியர்.

சான்று :- பட்டு அழகானது, கொக்கு மடிந்தது, மூக்கு வளைந்துளது. ஆனால் வல்லெழுத்து வரின் மிகும் என்பதனைத் தனியே

www.padippakam.com



ஒரு நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். அடுத்த நூற்பா வேற்றுமைக்கு உரியது என்பதற்குச் சிறுசான்று கூடக் காட்டுதல் இயலாது.

இளம்பூரணர் உரையைக் காண்போம் :

426 - "அல்லது கிளப்பின் எல்ல மொழியும்
சொல்லிய பண்பின் இயற்கை யாகும்"

இஃது ஆறு ஈற்றுக் குற்றியலுகரத்திற்கு அவ்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் அல்வழியைச் சொல்லுமிடத்து ஆறு ஈற்றுக் குற்றிய லுகரமும் மேற்சொல்லிய பண்பினையுடைய இயல்பாய் முடியும் எ - று. எ.டு நாகு கடிது, வரகு கடிது, தென்கு கடிது, எஃகு கடிது, குரங்கு கடிது, சிறிது, தீது, பெரிது என வரும்.

427 - "வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே"

இஃது அவ்வாற்றில் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள். வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றியலுகரம் (வல்லெழுத்து வருவழி) வல்லெழுத்து மிக்கு முடியும் எ - று.

எ-டு. கொக்குக் கடிது, சிறிது, தீது, பெரிது என வரும்.

நூற்பா 426 இல் வன்றொடர்க்குச் சான்று தராத இளம்பூரணர் நூற்பா 427 இல் வன்றொடர் மிகுதலுக்குச் சான்று தருவதுடன் அவ்வாற்றில் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று எனத் தெளிவாக நூற்பா 427 நூற்பா 426 இன் தொடர்ச்சியே என்பதைப் புலப்படுத்தியுள்ளார். எனவே நூற்பா 427 வேற்றுமைக் குரியது எனல் பொருந்தாது. மேலும் அந்நூற்பாவைத் தொடர்ந்து வரும் சில நுற்பாக்களும் வேற்றுமைப் புணர்ச்சிக்குரியவையல்ல.

மேலும்,

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிறையும்

என வரும் நூற்பா 409 இல் - எல்லா இறுதியும் என்ற தொடர் இருந்தும் அடுத்த நூற்பாவில் (410)

"வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழி
தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே"

வல்லொற்றுத் தொடரைத் தனியே பிரித்துவிதி கூறப்பட்டுள்ள தையும் ஆய்ந்து பார்த்து உண்மையறிதல் வேண்டும்.

- இறைவிழியன்

படிப்பகம்

www.padippakam.com



## "தெலுங்கு படி" அரசினர் பார்வைக்கு

# மாணவர்களை மிரட்டும் பள்ளி

இது தமிழ்நாடுதான். நாங்களும் தமிழர்தாம். இதுவும் தமிழக அரசின் பள்ளிக்கூடம்தான். அதுக்காகத் தமிழ் மீடியத்துலதான் உங்க குழந்தையைச் சேர்க்கணும்னு ஏன் பிடிவாதம் செய்றீங்க? இங்கே பாதிக்கு மேல தெலுங்குப் புள்ளைங்கதான் படிக்குது. நீங்களும் உங்க குழந்தையைத் தெலுங்கு மீடியத்துல சேருங்க. தெலுங்கில சேர்த்தா புத்தகம், நோட்டு எல்லாம் ஃப்ரீயா தருவோம் ஃபீசும் குறைச்சல்.

கிருட்டிணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை பகுதியில் உள்ள பள்ளிகளில் இப்படிக் கட்டாயப் படுத்தி, தமிழர்களை தெலுங்கர்கள் ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள் தலைமை ஆசிரியர்கள்.

தேன்கனிக்கோட்டையில் இருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது அந்தேவனப்பள்ளி. இந்த ஊரில் உள்ள உயர்நிலைப்பள்ளியிலும் தொடக்கப்பள்ளியிலும்தான், சுற்றியுள்ள 50-க்கும் மேற்பட்ட வனக்கிராமங்களின் மாணவர்கள் படிக்கிறார்கள்.

"தொடக்கப் பள்ளியில் வாத்தியார் ரொம்ப பிடிவாதமா கட்டாயப் படுத்தினதால் என் ரெண்டாவது மகள் சதாவை தெலுங்கு மீடியத்தில் சேர்த்தேன். காது லேதுனு ஒண்ணுமே புரியலப்பா. எழுதவும் வரலை. நான் தெலுங்கல படிக்கமாட்டேன். இசுகூலுக்கே போகமாட்டேன்னு சொல்லிடுச்சு மறுபடி தமிழ் மீடியத்தில் சேர்க்க நன்பட்ட பாடு இருக்கே.." ரொம்பவே நொந்துகொண்டார் அந்தேவனப்பள்ளி கூலித் தொழிலாளி யான மணி.

இங்குள்ள உயர்நிலைப்பள்ளியின் நிலையோ மிகவும் மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது.

"இங்கே ரொம்பப் பசங்க தமிழ்தான் தெலுங்குப் பசங்க கம்மி தான். ஆனால் தெலுங்கு ஆதிக்கம்தான் கொடிகட்டிப் பறக்குது. தலைமை ஆசிரியர் பொறுப்பில் இருக்கிற முனிராசப்ப தெலுங்கு வெறியராவே மாறிக்கிட்டுருக்கிறார். தமிழ் வாத்தியார்களைப் பார்த்தாலே இருவருக்குப் பிடிக்கிறதில்லை. தமிழ் மாணவர்களைக் கண்டாலும் பிடிக்கிறதில்லை" என்கிறார் இந்தப் பள்ளியில் பயிலும் மாணவனின் தந்தையான ரமேசு.

பேத்தி கலைவாணியை பள்ளிக்கு அழைத்து வந்த அங்கம்மா ளும்மிடம்.... "இந்த இசுகூல்ல எப்பப் பார்த்தாலும் தமிழ் - தெலுங்கு பிரச்சினை தான். பாதி நாள் லீவு விட்ருவாங்க. தமிழ்ல படிக்கிற பசங்ககிட்டதான் அது. இதுனு வசூல் செய்வாங்க. 30 ரூபாய் அதிகமா பீசு வாங்குவாங்க. இலவச புத்தகத்துக்கு 20 ரூபாய், இலவச சட்டைக்கு 10 ரூபாய் இப்படி... புடுங்குவாங்க. தெலுங்குல படிச்சா எல்லாம் ஃப்ரீ" குறைசொல்லிவிட்டுப் போனார் அங்கம்மாள்.

www.padippakam.com



"அன்னிக்கு யாரோ கல்லெறிஞ்சு சன்னல் கண்ணாடி உடைஞ்சிப் போச்சு. இதுக்கு தமிழ் படிக்கிற பசங்கமேல போலீசு கம்ப்ளைண்ட் பண்ணிட்டாரு தலைமையாசிரியர் முனிராசப்பா இசுகூல்ல கிளம்பி யிருக்கிற தமிழ்-தெலுங்கு பிரச்சினை ஊருக்குள்ளயும் பரவிடுச்சு. எங்கே போய் முடியப்போகுதோ" இது பெரியவர் மாணிக்கம் செட்டியாரின் குமுறல்.

இப்படி பலரும் புகார்களை வாசிக்க... தலைமை ஆசிரியர் பொறுப்பிலிருக்கும் முனிராசப்பாவை சந்தித்தோம்.

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. தமிழ், தெலுங்கு வேறு பாடெல்லாம் காட்டுறது கிடையாதே. மாணவரை வேணும்னா கேளுங்க" என்று தலைமையாசிரியர் கூறியதும் ஏழெட்டு மாணவர்களை அழைத்து வந்து, அவர் எதிரில் விசாரித்தோம்.

"எச்.எம். பொய் சொல்றாங்க. தெலுங்குப் பசங்களுக்குதான் முக்கியத்துவம். தெலுங்குப் பசங்களுக்குத்தான் சிறப்பு வகுப்பு. எங்களுக்கு சிறப்பு வகுப்பு எடுக்கக் கூடாதுன்னு தமிழ் வாத்தியார்ட்ட சொல்லிட்டார். எங்களுக்கு விளையாடுறதுக்கு பந்துகூட தரமாட் டாங்க..." மாணவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அரட்டி விரட்டனார் தலைமையாசிரியர்.

வெளியே வந்த மாணவர் ஒருவர் நம்மிடம், "தெலுங்கு ஆசிரியர்களுக்கு முதல் தேதியே சம்பளம் கிடைக்கும். தமிழ் ஆசிரியர்களுக்கு 15-ம் தேதிக்குப் பிறகுதான் கொடுப்பார். வேணும்னா மணி சார்கிட்ட கேளுங்க" என்றார்.

தமிழ் ஆசிரியர் மணியை சந்தித்தோம்.

"நடக்கிற ஒவ்வொரு விசயமும் பல்லைக் கடிக்க வைக்குது. ஆனால் மேலதிகாரிங்க பர்மிசன் இல்லாம என்னால பேசமுடியாதே" பெருமூச்சு விட்டார் அவர்.

ஏன் இந்த மொழிப்பிரச்சினைகள்? வேறுபாடுகள்? மாவட்ட கல்வித்துறை வட்டாரத்தில் விசாரித்தோம்.

"அந்தப் பகுதியில் சில பள்ளிகளை முழுக்க முழுக்க தெலுங்குப் பள்ளிகளாக்கிவிட முயற்சிக்கிறார்கள். கிருட்டிணகிரி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஏராளமான தெலுங்கு ஆசிரியர்கள் பதிவு செய்து காத்திருக்கிறார்கள்.

இந்தப் பள்ளிகள் முழுக்க தெலுக்குமயமாகிவிட்டால் அவர்களுக் கெல்லாம் எளிதாக வேலை கிடைக்கும். என்ன செய்ய? டி.இ.ஓ. நாராயணபிள்ளையே ஒரு தெலுங்குக்காரர்தான். அவரும் அவர்க ளுக்குத்தான் சப்போர்ட் செய்கிறார்" என்றார்கள்.

இதுபற்றி டி.இ.ஓ.விடமும் கேட்டோம்.

"அப்படிப் பட்ட தவறு நடக்க வாய்ப்பில்லையே நான் விசாரிக்கிறேன்" என்றார் டி.இ.ஓ. **- நன்றி - நக்கீரன் - 21-12-05**

www.padippakam.com



## ஆய்வரங்கம்

# கரிகாலனா? கரிக்காலனா?

பேராசிரியர் இரா. மதிவாணன்

சோழமன்னருள் பெரும் புகழுக்குரியவன் கரிகாலன். கடைக் கழகக் காலத்தில் கரிகாலன் என்னும் பெயரில் மூன்று கரிகால் சோழர்கள் இருந்திருக்கிறார்கள். நரைமுடிதாங்கி, நரைமுது மக்கள் உவக்குமாறு சொல்லால் முறை செய்த கரிகாலன் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். கி.மு. 326 இல் அலெக்சாந்தர், பஞ்சாபில் போர் முடித்தபின், ஒரு சிற்றூரில் கரிகாலன் முதியோர்க்கு முறை வழங்கிய கதையைக் கேட்டு இந்தியர்களின் செங்கோலாட்சியையும் முறைவழங்கும் சிறப்பையும் வியந்து பேசினான். இச்செய்தி வடநாட்டு இந்திப்பாட நூல்களில் சச்சாநியாய என்னும் கதையாகவும் இடம் பெற்றுள்ளது. இக்கதை வடநாட்டில் பரவ ஒரு நூற்றாண்டேனும் ஆகியிருக்கும். ஆதலால் முதற்கரிகாலன் கி.மு. 420 அளவில் வாழ்ந்திருக்க வேண்டும்.

வெண்ணிப்போர் புரிந்த இரண்டாம் கரிகாலன் பொருநராற்றுப் படையில் முடத்தாமக்கண்ணியரால் பாடப்பட்டவன். இவன் கி.மு. 220 அளவில் வாழ்ந்தவன். இமய நெற்றியில் புலி பொறித்துக் கல்லணை கட்டிய திருமாவளவனாகிய கரிகால் பெருவளத்தான் கி.பி. 80 - 120 அளவில் வாழ்ந்தவன்.

இளமையில் கால்கரிந்தவன் மூன்றாம் கரிகாலன். தாய்வயிற்றில் இருந்தபோதே தாயம் எய்திப் பகைவர் சிறையிலிருந்து தப்பித்துப் பட்டத்து யானையால் அரசுரிமை எய்திவன், இரண்டாம் கரிகாலன் கால் கரிந்ததால்தான் கரிகாலன் எனப் பெயர் பெற்றான் என்பது நம்புமாறு இல்லை. கால் சுடப்பட்டால் தழும்பு ஏற்படும். கருநிறம் பெற்றுவிடாது. கரிகாலன் சிவந்தநிறம் கொண்டவனாயினும் கரிந்த இடம் கருப்பாகாது.

கால் கரிந்து போயிருந்தால் அவனைக் கரிக்காலன் என்றே அழைத்திருப்பர். கரிந்து போன கட்டை கரிக்கட்டை, கருமையான குருவி கரிக்குருவி, கரிச்சட்டி; கரிக்கோலம், கரிக்கீற்று, கரிக்கோடு என்னும் சொற்களைக் காண்க.

கரி, என்பது ஆண் யானை. களிறு எறிந்து பெயர்தல் ஆண்மையின் சிறப்பு. போரில் ஆயிரம் யானைகளை வென்றவன் மீது பரணி பாடுவது உண்டு. யானைகளுக்கு எமன் அதாவது கரிக்குக் காலன் என்னும் பொருளில் கரிகாலன் என்னும் பெயர் தோன்றியது. சிவனைக் காலகாலன் என்பர். இச்சொல் காலனுக்குக் காலன் எனப் பொருள் படுதல் காண்க. தொலைபேசி, விலைபேசு என்னும் சொற்களும் தொலைவுக்குப் பேசுதல், விலைக்குப் பேசுதல் என நான்காம் வேற்றுமைத் தொகையாக இருத்தலின் வல்லெழுத்து மிக வில்லை. இதைப் போன்றே கரிக்குக் காலனாகிய கரிகாலன் சொல்லிலும் இடையில் வல்லொற்று மிகவில்லை. களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக்கடன் என்பதைத் தமிழர்களின் முந்து வரலாற்றில்

படிப்பகம்

www.padippakam.com



நிலைநிறுத்திக் கரிகாலன் ஒருவனின் பெயரை வரலாற்று நெடுகிலும் பல சோழர் தமக்குரிய பெயராகக் கண்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

(தொலைப்பேசியில் பேசி என்பது பெயர். அது கருவியைக் குறிக்கும். பேசுதல் என்ற தொழிற் பெயராக விரித்தல் பொருந்தாது. எனவே தொலைப் பேசி என வலிமிகுதலே நன்று - ஆசிரியர்)

## யாவும் பொதுமையடா

**- கவியரசர் முடியரசனார்**

கோடி தொகுத்தபினும் மாடி எடுத்தபினும்
கூட வருவதொன் றில்லையடா
வாடி வதங்கிவிழும் ஏழை எளியவர்க்கு
வாழ்வு வழங்குவது நல்லதடா

வாழத் துடிப்பவனை நாளும் உழைப்பவனை
வாழ்வைச் சுரண்டுவது கொள்ளையடா
கோழை எலும்புகளும் கூர்மை யடைந்துவிடின்
கோலைத் தடுப்பவரும் இல்லையடா

பாழும் வயிற்றுணவு பஞ்சின் உடுக்கையிவை
பாரிற் பிறந்தவர்க்குப் பொதுமையடா
ஏழைக் கிவையிரண்டும் இல்லை விதிப்பயனாம்
என்று மழுப்புவது மடமையடா

தேவை யளவறிந்து யாவும் அடைந்தபினும்
தேடி முடக்குவது குற்றமடா
யாவும் பொதுமையென நீயும் உணர்ந்துநட
யாரும் நமதருமைச் சுற்றமடா.

## வாழ்த்துகிறோம்

31-12-2005 அன்று "முகம்" திங்களிதழ் ஆசிரியர் மாமணி அவர்கள் தமது 75 ஆம் பிறந்த நாளை இனிதாகக் கொண்டாடினார். அந்த மகிழ்வின் கொடையாக "நற்றமிழ்" இதழ்க்கு உருபா 100/- அளிக்கப்பட்டது. மாமணி அவர்கள் எல்லா வளமும் பெற்று இனிதாக வாழ வாழ்த்துகிறோம். - ஆசிரியர்

AIR MAIL

www.padippakam.com

நற்றமிழ்-திங்களிதழ்
NATRAMIZH-MONTHLY

பதிவு எண். புது.த.தி./2000/4265
Registration No. PONTAM / 2000 / 4265

அஞ்சல் உரிமம் : த.நா / அ.து.த 128 / 06-08. திங்கள் தோறும்
15 / 16ஆம் நாளில் நெல்லித்தோப்பு அஞ்சலகத்தில் சேர்க்கப்படுகிறது.
Postal registration : TN/PMG (CCR) / 128/06-08. Posted
at NELLITHOPE POST OFFICE On 15th / 16th of Every Month.

**அச்சிட்ட நூல் அஞ்சல் - Printed Book Post**

**LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP**
**NO. SSP / PY / 128 / 06-08**

பெறுநர் :
திரு.

N. MURALY
Dysse garden - 24, T.V,
7500 Holstebro,
Danmark.







## புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

**112, காமாட்சியம்மன் கோவில் வீதி, புதுச்சேரி – 605 001.**

நானும் தமிழும் / திங்கள் தோறும் இரு கவிஞர்கள் நிகழ்ச்சி கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

25-01-2006 - தமிழ் இலக்கியத்தில் இசை - அரிமளம் சு. பத்மநாபன்
01-02-2006 - நானும் தமிழும் - தாவீது. அன்னுசாமி
08-02-2006 - இரு கவிஞர்கள் - மா. கிருட்டிணபாரதி, மா. கோபாலன்
15-02-2006 - திராவிட மானுடவியல் - II - பக்தவத்சலபாரதி

ப. மருதநாயகம், இயக்குநர்.

| | | | |
|---|---|---|---|
| தனி இதழ்க் கட்டணம் | — | உரு | 6.00 |
| ஆண்டுக் கட்டணம் | — | உரு | 75.00 |
| வெளிநாட்டு ஆண்டுக் கட்டணம் | — | உரு | 300.00 |
| வாழ் நாள் கட்டணம் | — | உரு | 600.00 |

திரு. ந. இளம்பூரணன் அவர்கட்கு உரிமையான 17, முதல் தெரு, இராசய்யர் தோட்டம், புதுச்சேரி - 605 013. இல் உள்ள அகத்தியர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, நற்றமிழ் உரிமையாளரும் ஆசிரியருமான புலவர் மு. இறைவிழியனாரால் 43, அங்காடித் தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி - 605 005. என்கிற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது. தொலைப்பேசி : (0413) 2203765 கைப்பேசி : 98942-25129

Printed by **N. Elampuranan,** Owner of the press and published by **M. Iraivizhiyan** on behalf of **M. Iraivizhiyan** and printed at AHATHYAR PRESS, 17, First Street, Rajaiyer Thottam, Pondicherry - 605 013. and published at 43, Market Street, Nellithope, Pondicherry - 605 005. Editor **M. Iraivizhiyan,** Telephone : (0413) 2203765 **Cell : 98942 - 25129**

படிப்பகம்